# சமரக்கொடியின்புரட்சிக்கட்சியுடன் இளஞ்செழியன் இ.தி.மு.க. இணையும்?

Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
பான்: 389

மலா 11
இதழ்: 256
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஐப்பசி 10 ஷஃபான் 14 ஞாயிற்றுக்கிழமை - [26-10-69]

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்



டொலர் கோர்ப்பரேஷன்
14, டாம் வீதி, கொழும்பு

தீபாவளி ஜவுளிகளை
தெரிவு
செய்துவிட்டீர்களா?
உங்கள் எண்ணம்போல் தெரிவுசெய்ய
எண்ணற்ற ஜவுளித் தினுசுகள் உண்டு.
தெரிவுக்கு முந்துங்கள்.
ரமணி ரெக்ஸ்ரைல்ஸ்
166, கே. கே. எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்.

கொழும்பு, சனி

சர்ச்சைக்கும் பிரச்னைக்கும் அரசியல் பிரசாரத்துக்கு ஒரு கருவியாகவும் உள்ளாகியிருக்கும் இலங்கைத் திராவிடமுன்னேற்றக் கழகம் அரசியலில் புதிய தொரு கொள்கையைப் பின்பற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. திரு எட்மண்ட் சமரக்கொடியின் தலைமையிலுள்ள புரட்சிவாத லங்கா சமசமாஜக்கட்சியுடன் இணைந்து செயல்படுத்துவதற்கான முயற்சிகளை இ. தி. மு. கழக மேலிடம் செய்துவருவதாகத் தெரிகிறது.

திரு. எட்மண்ட் சமரக்கொடியின் புரட்சிவாத சமசமாஜக்கட்சியுடன் இலங்கைத் திராவிடமுன்னேற்றக்கழகம் இணைந்து செயலாற்றுவது சம்பந்தமான பேச்சுவார்த்தைகள் இரண்டொரு வருடங்களுக்கு முன்னர் நடைபெற்றதாகவும் ஆனல் தொடர்ந்து முயற்சி செய்யப்படவில்லையென்றும் கழகத்தின் மேலிடம் தெரிவித்தது. சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தை புரட்சிவாத சமசமாஜக்கட்சியும் இலங்கைத் திராவிட முன்னேற்றக்கழகமும் எதிர்பார்ப்பதாலும் இந்திய வம்சாவழியினருக்கும் இலங்கை வாழ் தமிழ்மக்களுக்கும் இங்கு நியாயம் கிடைக்கவில்லையென்பதை இரு கட்சியினரும் ஒப்புக்கொள்வதாலும் இரு கட்சிகளுக்கும் ஆட்சிமன்ற முறையில் நம்பிக்கையில்லையென்பதாலும் இரு தரப்பினரும் சோஷலிச சமுதாயத்தை அமைப்பதையே குறிக்கோளாகக் கொண்டிருப்பதாலும் இரு கட்சிகளும் இணைந்து செயல்படுவதில் என்ன தவறு இருக்க முடியுமென்று இ. தி. மு. கழக மேலிடம் கேட்கிறதாம்.

யு. என் பி.யிடன் தமிழ்க் காங்கிரசும், ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியுடன் லங்கா சமசமாஜக் கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியும் இணைந்து செயல்பட முடியுமானல் இளஞ்செழியன் இலங்கைத் திராவிட முன்னேற்றக்கழகமும் எட்மண்ட் சமரக்கொடியின் புரட்சிவாத சமசமாஜக்கட்சியும் ஏன் இணைந்து செயல்பட முடியாது என்றும் கழகத்தின் மேலிடம் கேட்கின்றதாம்.

# அசம்பாவிதங்களைத் தடுக்கவே பல்கலைக்கழகம் மூடப்பட்டது

## வீடு திரும்பிய மாணவர் தெரிவிக்கும் விளக்கம்

கோட்டை, ஞாயிறு

**"பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பயிலும் சுமார் 25 பிக்குகள் பல்கலைக்கழக வளவிற்குள்ளிருந்து ஆயுதம் தாங்கிய பொலிஸாரை வெளியேற்றவேண்டுமென்று கோரி, சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப்போவதாகத் தெரிவித்ததாலும், பொலிஸாருக்கும் மாணவர்களுக்குமிடையில்மோதல்ஏற்படாமல் தடுப்பதற்காகவும் வேலைநிறுத்தஞ்செய்த மாணவர்களுக்கும் வேலைநிறுத்தஞ்செய்யாத மாணவர்களுக்குமிடையில் ஏற்படவிருந்த சச்சரவைத் தவிர்க்கும் பொருட்டுமே பல்கலைக்கழகம் தற்காலிகமாக மூடப்பட்டது."**

பேராதனை பல்கலைக்கழகம் மூடப்பட்டதைத் தொடர்ந்து பெட்டிபடுக்கைகளுடன் வீடுவந்து சேர்ந்த பல்கலைக்கழக மாணவர் ஒருவர் நேற்று நமது நிருபரிடம் மேற்கண்டவாறு கூறினர்.

அம்மாணவர் பல்கலைக்கழகத்தில் நடந்ததை பற்றி மேலும் விளக்கமாக கூறிய

ஞல் உபவேந்தர் சகல மாணவிகளுக்கும் விஜயவர்த்தன மண்டபத்தில் இடவசதி ஒழுங்குசெய்தார். இதனல் அங்கிருந்த மாணவர்களுடன் சேர்ந்து சுமார் 500 மாணவர்கள் வெளியில் இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

முதல் வருட மாணவிகளுக்கு விஜயவர்த்தன மண்

கள். இம்முறை பரீட்சார்த்தமாக நடத்தப்படுவதாகவும், இலாப நஷ்டத்தைப் பார்த்து மாற்றுவதாகவும் உப-வேந்தர் தெரிவித்தார். உடனடியாக முறையை மாற்றவேண்டுமென்பது மாணவரின் முதலாவது கோரிக்கை.

மண்டபங்களில் இடமில்லாததால், சுமார் 25 பிக்

## "விழிப்புணர்ச்சியுள்ளவரின் சேவை சங்கத்திற்குதேவை"

யாழ்ப்பாணம், ஞாயிறு

அரசாங்க உத்தியோகத்தர்கள் நாட்டின் விவசாய உற்பத்திக்காக உழைக்க வேண்டும் இதற்கு கூட்டுறவாளர் உதவவேண்டும். நல்ல தலைவர்களால் மட்டும் சங்கத்தை வளர்க்க முடியாது. விழிப்புணர்ச்சியுள்ளவர்களின் சேவையும் சங்க வளர்ச்சிக்குத்தேவை. நம்பிக்கை வைக்க இயக்கம், நம்பிக்கையுள்ள இயக்கமாக இருக்கவேண்டும்

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் நடந்த கூட்டுறவு மகாநாட்டிற்குத் தலைமை தாங்கிய யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. எப். சி பீற்றேஸ் பேசும்போது மேற்கண்டவாறு கூறினர்.

சிரேஷ்ட கூட்டுறவு ஆக்க ஆணையாளர் திரு, கே எஸ் பொன்னுத்துரை கூறியதாவது: கைத்தொழில் துறையில் வாலிபர்கள்வேலைபெற நம்பியிருந்தால் கைத்தொழில் விருத்தியடைய முடியாது.

நமக்கு வருகின்ற பணத்தில் ஒருபகுதியை சேமித்தால் முன்னேற்றத்திற்கு வழியுண்டு சேமிக்கும் பணத்தை நல்ல முறையில் முதலீடு செய்யவேண்டும், இதனல் சமுதாயம் நன்ருக வரும் தொழில் அபிவிருத்தியில் முதலீடு செய்ய வேண்டும். கைத்தறி நிலையம் ஆரம்பித்தால் அதன் மூலம் பலருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். எத்தனையோ தொழில்துறையில் வேலை அதிகம் இருக்கிறது. இவற்றை காலம் கடத்தாது நாம் பயன்படுத்தவேண்டும்.

நாம் முன்னேற விவசாயத்தை நம்பியிருந்தால் போதாது கைத்தொழிலிலும் அதிக விருத்தி செய்ய வேண்டும். யாழ்ப்பாணத்தில் கைத்தொழில்துறை மிகவும் குறைவு. தென்

## நடிகை வாங்கிய வைரம்

நியூயோர்க், அக். 25

பிரபல ஹலிவூட் நடிகையான எலிசபெத் டெய்லர் பெரும் விலை மதிப்பு மிக்க வைரம் ஒன்றைவாங்கியிருக்கிருர்.

இந்த வைரம் ஏலத்தில் விடப்பட்ட பொழுது எலிஸபெத் டெயிலருக்காக அவரது கணவர் நடிகர் றிச்சார்ட் பேர்ட்டன் அதை ஏலத்தில் வாங்கினர். அவர் வாங்கிய விலை என்ன என்பது வெளியிடப்படவில்லை ஆனல் அதனை ஏலத்தில் விட்டகம்பனி 70 லட்சம் டாலருக்கு வாங்கியிருந்தது.

எலிஸபெத் டெய்லர் கிளியோபாட்ரா முதலிய பிரம்மாண்டமான சர்வதேசப் புகழ்வாய்ந்த படங்களில் நடித்த நடிகையாவார்.

## 320 கைதிகள்

இன்று

## அப்பல்லோ–11 வீரர்கள் பம்பாய்க்கு வருகிறார்கள்

பம்பாய், அக்.26

உலக சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருக்கும் அப்பல்லோ-11 வீரர்கள் இன்று மாலை பம்பாய் வந்தடையவிருக்கிருர்கள். அமெரிக்க ஜனதிபதி திரு. நிக்சனின் விசேட விமானத்தில் சந்திரபயணிகள் மூவரும் ஆசியப்பயணத்தின் ஆரம்பமாக இன்று பம்பாய்க்கு வருகிருர்கள்.

பாரத அரசின் விருந்தினர்களாக வரும் இவர்களுக்கு விமான நிலையத்தில் வைத்து அன்பான வரவேற்பளிப்பதற்கு பம்பாய் நகரசபை ஏற்பாடு செய்துள்ளது. ஒருநாள் மட்டும்தங்கிநிற்கும் இவர்கள் மறுநாட்காலை பம்பாயிலிருந்து டாக்காவுக்கு புறப்பட்டுச் செல்வர்

நீல்ஆம்ஸ்ரோங், எட்வின் ஆல்ட்ரின், மைக்கெல் கொலின்ஸ் ஆகிய மூவருடனும் அ ர்களதுமனைவிமார் வருகின்றனர்.

## நவரத்தினத்திற்கு இரத்த திலகமிட்டனர்

ஊரதீவு, சனி

தமிழர் சுயாட்சிக் கழகத் தலைவரும் ஊர்காவற்றுறை எம். பி.யுமான திரு வ. நவரத்தினத்துக்கு புங்குடுதீவில் நடைபெற்ற பகிரங்கக் கூட்டத்தில் இரத்தத்திலகம் இடப்பட்டது. புங்குடுதீவு கிராமசபை உறுப்பினர் திரு சு, திருநாவுக்கரசு திரு நவரத்தினத்துக்கு கதராடை போர்த்தி காந்தியின் வழியிலே செல்லுமாறு புங்குடுதீவு மக்கள் சார்பில் ஆணை வைத்திலிங்கம், ந, இராசதுரை, சு. கருணகரன் ஆகிய வாலிபர்கள் திலகமிட்ட பின்னர் இறுதியாகத் திலகமிட்டு வைபவத்தை முடித்து வைத்து திரு பொன்கைவேந்தன் பேசுகையில் தலைவர் நவரத்தினத்தின் கீழ் தமிழ் ஈழம் பெறுவதற்கு தமிழ் வாலிபர்கள் போராட வேண்டுமென்றும் தமிழ்த் தாய் அருள்பாலிப்பாள்என்றும் கூறினர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்ட அரசாங்க அதிபர் திரு. எப். சி பீற்றேஸ் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

சிரேஷ்ட கூட்டுறவு ஆக்க ஆணையாளர் திரு, கே எஸ் பொன்னுத்துரை கூறியதாவது: கைத்தொழில் துறையில் வாலிபர்கள்வேலைபெற்றுக்கொள்ளலாம். கைத்தொழில்பற்றி பேச்சளவில் இருந்து பயனில்லை. இதற்கு பணம் வேண்டும். மாகாண கூட்டுறவு வங்கியைமட்டும் ...த்தவேண்டும்.

நாம் முன்னேற விவசாயத்தை நம்பியிருந்தால் போதாது கைத்தொழிலிலும் அதிக விருத்தி செய்யவேண்டும். யாழ்ப்பாணத்தில் கைத்தொழில்துறை மிகவும் குறைவு. தென்பகுதியில் தற்பொழுது சகல பொருட்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. அங்கிருந்துதான் பல பொருட்

[4-ம்பக்கம் பார்க்க]

மானிப்பாய் பட்டினசபை

# சோலைவரிக் குறைப்புத் தீர்மானம் தோல்வி

மானிப்பாய், சனி

மானிப்பாய் பட்டினசபை சோலைவரியை 9 வீதத்திலிருந்து 6 வீதமாகக்குறைக்க வேண்டும் என உள்ளூராட்சி அமைச்சருக்கு எழுதிய கடிதத்திற்கு மேற்படி வரியைக் குறைக்க வேண்டியதன் காரணத்தை அவர் கேட்டு பதில் எழுதியுள்ளார்.

அண்மையில் நடைபெற்ற இச்சபையின் கூட்டத்தில் இது பற்றி ஆராயப்பட்டது. சோலைவரியை 9 வீதத்திலிருந்து 6 வீதமாகக்குறைத்து 1970-ம்ஆண்டு வரவு செலவுத் திட்டத்தைத்தயாரிக்கவேண்டும் என 1-ம்வட்டார உறுப்பினர் திரு சி. கதிர்காம முதலியார் பிரேரித்தார். இதை 7-ம்வட்டார உறுப்பினர் திரு. சி. மார்க்கண்டு ஆமோதித்தார்.

சென்ற 4 ஆண்டுகளாக வரட்சியினாலும், வெள்ளத்தினாலும் வரியிறுப்பாளர் பாதிக்கப் பட்டிருப்பதாலும் வாழ்க்கைச்செலவு உயர்ந்துள்ளதுடன் வேலையில்லாத் திண்டாட்டம் நிலவுவதாலும் சோலைவரியைக்குறைக்கவேண்டும் என திரு. சி. கதிர்காம முதலியார் பேசுகையில் எடுத்துக்காட்டினார். 1969-ம்ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் ரூ 94,448 வருவாயாகவும், ரூ.78,218 செலவாகவும் தயாரிக்கப் பட்டுள்ளது. இதன் மூலம் மிஞ்சும் பணத்தையும் இப்போது தொழிற்சாலைகளுக்கு உயர்த்தப்பட்டுள்ள வரி மூலம் கிடைக்கும் பணத்தையும் கொண்டு சோலைவரியைக்குறைப்பதால்ஏற்படும் வருவாய்க்குறைவை நிவர்த்தி பண்ணலாம் என்றும் அவர் மேலும் பேசுகையில் விளக்கினார். சோலைவரியை வருடா வருடம்அறவிடாத காரணத்தால் ரூ.52,000 ஐ சுலபமாக அறவாக்கலாம்என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் இது விடயமாக சபையில்ஆராயப்பட்டு வாக்கெடுப்புக்குவிடப்பட்டபோது 6 வீதமாகக்குறைக்க வேண்டும் என்ற பிரேரணை தோல்வியடைந்தது.

எலிஸபெத் டெய்லர் கிளியோபாட்ரா முதலிய பிரம்மாண்டமான சர்வதேசப் புகழ்வாய்ந்த படங்களில் நடித்த நடிகையாவார்.

## 320 கைதிகள் விடுதலையாவார்கள்

கோட்டை, சனி

320 கைதிகள் ஒரு புதிய நலநோக்குத் திட்டத்தின் கீழ் விடுதலை செய்யப்படுவார்கள்.

இத்திட்டத்தின் மூலம் நீண்டகால கைதிகள் விடுதலை செய்யப்பட்டு நலநோக்கு அதிகாரிகளினால் மேற்பார்வை செய்யப்படுவார்கள். நீதியமைச்சர் திரு.எ.எவ். விஜயமன் இத்திட்டத்தை அங்கீகரித்து இத்திட்டத்தின்படி விடுதலை செய்யத்தக்க கைதிகள் தெரிவுசெய்வதற்கு சிறைச்சாலை ஆணையாளர் திரு. எவ். டி. எல். ரத்னாயக்கா தலைமையில் ஒரு குழுவொன்றையும் நியமித்துள்ளார்.

## சமசமாஜக்கட்சி பற்றி பிரதமர்

அம்பாறை, சனி

சமசமாஜக்கட்சியினர் ஒவ்வொருவராக அரசாங்கக்கட்சியில் சேர்ந்து விடுவார்கள். இக்கட்சி அழிந்து கொண்டுபோய்க் கொண்டிருக்கும் கட்சி.

அம்பாறை ஹாடிதொழில்நுட்ப நிலையத்தில் நடைபெற்றஐக்கிய தேசியக்கட்சி வாலிபர் சங்கத்தின் 20-வது ஆண்டுக்கூட்டத்தில்தலைமை தாங்கி உரையாற்றிய பிரதமர் டட்லி சேனநாயக்கா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

...களுடன் வீடுவந்து சேர்ந்த பல்கலைக்கழக மாணவர் ஒருவர் நேற்று நமது நிருபரிடம் மேற்கண்டவாறு கூறினார்.

அம்மாணவர் பல்கலைக்கழகத்தில் நடந்ததை பற்றி மேலும் விளக்கமாக கூறியதாவது: சங்கமித்த மண்டபத்திலும் விஜயவர்த்தன மண்டபத்திலும், இடமிருக்கிறது. சங்கமித்த மண்டபத்திலுள்ள மாணவிகளை, விஜயவர்த்தன மண்டபத்திற்கு மாற்றிவிட்டு, சங்கமித்தா மண்டபத்தை மாணவர்களுக்கு கொடுப்பதற்காகவும் மற்றும் சில ஒழுங்குகள் செய்வதற்காகவும் தற்காலிகமாக மூடப்பட்டதாக தெரிகிறது.

விஜயவர்த்தன மண்டபத்தில் இதுவரை காலமும் மாணவர்களே இருந்து வந்தனர். இம்மண்டபம் மற்ற மண்டபங்களிலும் பார்க்கக் கூடிய நஷ்டத்தில் நடாத்தப்பட்டது. பல்கலைக்கழக மண்டபங்களில் அங்கு பலும் சகல மாணவர்களுக்கும் இடவசதியில்லை. இதனால் மாணவர்கள் 1 வருடம் வெளியில் இருக்க வேண்டியிருந்தது. வெளியில் மாணவர்கள் இடம் எடுத்தாலும் மாணவிகள் இடம் எடுப்பது மிகவும் கஷ்டமாக இருந்தது இதற்கு இடவசதி ஒழுங்குசெய்தார். இதனால் அங்கிருந்த மாணவர்களுடன் சேர்ந்து சுமார் 500 மாணவர்கள் வெளியில் இருக்கவேண்டிய நிலைஏற்பட்டது.

முதல் வருட மாணவிகளுக்கு விஜயவர்த்தன மண்டபத்திலும் மற்ற மாணவிகளுக்கு ஹில்டா ஒபயசேகரா, இராமநாதன். சங்கமித்த மண்டபங்களில் இடவசதியளிக்கப்பட்டு விஜயவர்த்தன மண்டபம் முற்றாக மாணவிகளுக்கு ஒதுக்கப்பட்டது.

விஜயவர்த்தனவில் ஒருதவணைக்கு, வைத்திய, லோன்றி செலவுடன்சுமார் 250 ரூபா மாணவரிடமிருந்து பெறப்பட்டது. இதுபெரும் நஷ்டத்தை கொடுத்தது. இதனால் 'கபேரியா (உடனுக்குடன் பணம் கொடுக்கும் முறை) முறையை உபவேந்தர், கொண்டுவந்தார். இம்முறைப்படி தவணைக்கு 150 ரூபா கட்டவேண்டும். காலைச்சாப்பாடு மட்டும் கிடைக்கும் நண்பகல், இரவு சாப்பாடு உடனுக்குடன் காசுகொடுத்து வாங்கவேண்டும். இம்முறை அநேக ஏழை மாணவர்களுக்கு கஷ்டத்தை கொடுத்தது. பழைய முறையை மாற்றும் படி மாணவர்கள் கோரினார் பார்த்து மாற்றுவதாகவும் உப-வேந்தர் தெரிவித்தார். உடனடியாக முறையை மாற்றவேண்டுமென்பது மாணவரின் முதலாவது கோரிக்கை.

மண்டபங்களில் இடமில்லாததால், சுமார் 25 பிக்குகளும் இம்முறை வெளியில் இருக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. இப்பிக்குகளுக்கு மண்டபத்தில் இடவசதியளிக்கவேண்டுமென்பது மாணவரின் மற்றொரு கோரிக்கை.

மாணவிகளின் விஜயவர்த்தன மண்டபத்திற்கு மாணவர்கள் செல்லக்கூடாதென

(4-ம் பக்கம் பார்க்க)

## பம்பாயில் இந்திரா

பம்பாய் அக். 25

பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி இன்றுமாலை பம்பாய் வந்து சேர்ந்தார்.

தனியார் துறைவியாபாரிகள் வர்த்தகர்கள் கூட்டத்தில் அவர் கலந்துகொண்டு பேசினார்

வங்கிஊழியர் கூட்டத்திலும் இங்குபேசினார். ஊழியர்களின் பிரதிநிதி ஒருவர் மத்திய குழுவில் அங்கம் வகிக்கவேண்டுமென வங்கிஊழியர்கள் பிரதமரிடம் கேட்டுக் கொண்டனர். பம்பாய் விமான நிலையத்தில் அவருக்கு பிரமாண்டமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இருல் வியாபாரி கடத்தல் வழக்கு

## 6 எதிரிகளும்குற்றவாளிகள்

மட்டுவில், சனி

பலாத்காரமாக கடத்திச் சென்றது மனிதசஞ்சாரமற்ற நடுக்காட்டில் வைத்திருந்தது, மனிதாபிமானமற்ற முறையில் தாக்கியது இப்படியாக உங்கள் 6 பேர் மீதும்சுமத்தப்பட்ட மூன்று குற்றச்சாட்டுகளும் நிரூபிக்கப்பட்டுள்ளன. எனவே உங்களை செப்டம்பர்மாதம் 5-ம் திகதிவரை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிடுகிறேன்.

இவ்வாறு இருல் வியாபாரியான கார்பாலியோவை, பலாத்காரமாகக் கடத்திச் சென்று உயிருடன் எரித்துக் கொலை செய்வதாகப் பயமுறுத்தி, தாக்கிய வழக்கில் சாவகச்சேரி மாவட்ட நீதவான் திரு. ஸி. எம். தருமலிங்கம் தீர்ப்பளிக்கையில் கூறினார்.

இந்த வழக்கில் இருல் வியாபாரியான மரியான் கார்பாலியோ என்பவரை சதாசிவம் இரத்தினம், பிலிப் இராஜதுரை, கதிரவேலு காளிமுத்து, பொன்னம்பலம். தம்பிராஜா, கந்தையா தம்பிராஜா, பி.தனபாலசிங்கம், ஆகிய 6பேரும் பலாத்காரமாகக் கடத்திச் சென்று, பயமுறுத்தியதாக கிளிநொச்சி பொலிசாரால் தொடரப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் 1-ம்எதிரியின் சார்பில் வழக்கறிஞர் திரு. எஸ் கந்தசாமியின், அனுசரணையுடன் அட்வக்கேட் திரு கே தம்பிரத்தினம் ஆஜரானார். 2-ம்,3-ம் எதிரிகளின் சார்பில் வழக்கறிஞர் திரு.வி. பி.கார்த்திகேசு அனுசரணையுடன், அட்வக்கேட் திரு. எஸ். ஜெயசிங்கம் ஆஜரானார் 4-ம், 5-ம் எதிரிகள்சார்பில் வழக்கறிஞர் திரு. எஸ். கந்தசாமி அனுசரணையுடன் அட்வக்கேட் திரு வி.என். நவரத்தினம் ஆஜரானார். 6-ம் எதிரி சார்பில் வழக்கறிஞர் திரு எஸ், பி.மயில்வாகனம் அனுசரணையுடன் அட்வகேட் திரு. ஜெகநாதன் ஆஜரானார்.

## காரைத் துரத்தி பிடித்த ஜீப்

யாழ்ப்பாணம்,ஞாயிறு

பொலிஸ் ஜீப் ஒன்று நேற்றுக்காலை பெரிய கடையிலிருந்து சிவன் பண்ணைவீதிவழியாக சந்தேகத்தின்பேரில் காரொன்றை அசுர வேகத்தில் துரத்தியது. கடைசி பொலிசாரின் முயற்சி வெற்றியளித்தது. பொலிசார் அக்காரை கைப்பற்றி பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றனர், இதுபற்றி பொலிஸ் நிலையத்தில் விசாரித்த போது விசாரணை முடிவடையவில்லை எனத் தெரிவித்தனர்.

## கேணிக்குள் சடலம்

யாழ்ப்பாணம், சனி

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் கேணிக்குள் வயோதிபர் ஒருவர் நேற்று முன்தினம் நண்பகல் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

நல்லூர்ப் பொலிஸார் விசாரணை நடத்தினர்.

(கா.நி)

...இடப்பட்டது. புங்குடுதீவு கிராமசபை உறுப்பினர் திரு சு, திருநாவுக்கரசு திரு நவரத்தினத்துக்கு கதராடை போர்த்தி காந்தியின் வழியிலே செல்லுமாறு புங்குடுதீவு மக்கள் சார்பில் ஆணையிடுகிறேன் என்றார். அதனைத் தொடர்ந்து புலவர் ஈழத்துச் சிவானந்தன் தலைமையில் ஏழு வாலிபர்கள் தங்களகைகளை 'பிளேடால்' கீறி அதிலிருந்துசீறிய இரத்தத்தை எடுத்து திரு நவரத்தினத்தின் நெற்றியில் திலகமிட்டனர்.

பல வாலிபர்கள் திலகமிட முன்வந்தபோதும்விழா அமைப்பாளர்களின்வேண்டுகோளின்படி ஏழு பேரே திலகமிட்டனர்,

முதலில் திலகமிட்டு இரத்ததிலகவைபவத்தை ஆரம்பித்து வைத்து புலவர் ஈழத்துச் சிவானந்தன் பேசுகையில், திரு நவரத்தினத்தின் வெற்றிக்காகவும் தமிழினத்தின் விடுதலைக்காகவும் எங்கள் இரத்தத்தை தாரைவார்க்க தகாராய் இருக்கிறோம் என்றார். க. சுயராஜ்யம், த புஸ்பதாசன் பொ. ... பேசுகையில் தலைவர் நவரத்தினத்தின் கீழ் தமிழ் ஈழம் பெறுவதற்கு தமிழ் வாலிபர்கள் போராட வேண்டுமென்றும் தமிழ்த்தாய் அருள்பாலிப்பாள்என்றும் கூறினார்,

திலகத்தை ஏற்று திரு வ, நவரத்தினம் எம் பி பேசுகையில் எமது பாதை கரடுமுரடான கல்முள் நிறைந்த கடுமையானபாதை, உயிர்த்தியாகங்கள் கூட செய்ய வேண்டி ஏற்படலாம் இவை யாவற்றையும் எதிர்பார்த்தே நாம் செல்லவேண்டும் இன்றைக்குத் திலகமிட்ட இளைஞர்களின்விடுதலைத்துடிப்பையும் தியாக உணர்வையும் நான் பாராட்டுகிறேன், இத்தகைய இளைஞர்கள் தமிழ் ஈழத்தின் சந்துபொந்துகளில் இருந்தெல்லாம் புறப்பட்டு வருவார்களாயின் தமிழ் ஈழம் பெற்றே தீருவோம் வருவார்களென்று நம்புகிறேன் இத்தகைய இளைஞர் திருக்கூட்டத்தினால் தான் எமது நாடு விடுதலை பெறும் என்று கூறினார்,

## தீவுப்பகுதியில் குடும்ப கட்டுப்பாடு சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஞாயிறு

தீவுப்பகுதிகளில் இம்மாதமும் அடுத்தமாத முற்பகுதியிலும் குடும்பத்திட்ட கல்வி பற்றிய சொற்பொழிவுகளும் படக்காட்சிகளும் நடைபெறவுள்ளதாக ஊர்காவற்றுறை வைத்திய அதிகாரி டாக்டர் இ தெய்வேந்திரன் தெரிவித்துள்ளார்.

குடும்பத்திட்ட சங்கமும் சுகாதார இலாகாவும் மேற்படி குடும்பத்திட்டக் கல்வியை மக்களுக்குவழங்கவுள்ளன. குடும்பதிட்ட சங்கத் தகவல் அதிகாரி திரு. அன்ரன்குணசேகரா குடும்ப திட்ட சங்க உதவிதமிழ் தகவல் அதிகாரி திருமதி யோகா பாலச்சந்திரன் ஆகியோருடன் சுகாதார இலாகாவைச்சேர்ந்த ஊர்காவற்றுறைச் சுகாதார அதிகாரியும் சேர்ந்து மேற்மடி குடும்பத்திட்ட சொற்பொழிவுகளையும் படக்காட்சிகளையும் வழங்க உள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தாய்மார்களினதும்பிள்ளைகளினதும் நலனுக்குக் திட்டமிடப்பட்ட குடும்பம் அவசியம் என்பதை எடுத்துக் காட்டவும் குடும்பத்திட்ட சேவைகள் பற்றி மக்கள் மத்தியில் நிலவும் தவறான கருத்துக்களைப் போக்கவுமே குடும்பத் திட்டக் கல்வி இப்பகுதியில் வழங்கப்படவிருக்கிறது என தீவுப்பகுதிவைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

இம் மாதம் 26ம் திகதி தொடக்கம் அடுத்தமாதம் முதலாம் திகதிவரை குடும்பத்திட்ட நிகழ்ச்சிகள் தீவுப்பகுதிகளில்நடைபெற விருக்கின்றன. ஊர்காவற்றுறை, நயினாதீவு, அனலைதீவு, புங்குடுதீவு, நெடுந்தீவு, வேலணை, அல்லைப்பிட்டி, காரைநகர் ஆகிய பகுதிகளில் காலை மாலை இரு வேளையும் மேற்படிசொற்பொழிவுகளும், படக்காட்சிகளும் நடைபெறுமெனஅறிவிக்கப்பட்டுள்ளது.

## 6ம் 7ம் வகுப்பு பரீட்சை

உடுவில், சனி

வடமாகாணத்திலுள்ள சகலபாடசாலைகளுக்குமான 6ம் 7ம் வகுப்புகளுக்குரிய மூன்றும் தவணைப் பரீட்சைகள் அடுத்தமாதம் நடைபெற இருக்கின்றன.

நவம்பர்மாதம் 25ம்,26ம் திகதிகளில் இப்பரீட்சையை நடாத்த வடமாநிலக் கல்வி வித்தியாதிபதி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

கூட்டுறவு மகாநாடு

## 'கூட்டுறவு இயக்கத்தின் அபிவிருத்திக்கு உழைக்கவேண்டிய தருணம் வந்துள்ளது

யாழ்ப்பாணம். ஞாயிறு

'இலங்கைக்கூட்டுறவுச்சம்மேளனம், வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபை உட்பட மாவட்ட சமாசங்கள் என்பனவற்றுக்குக் கூட்டுறவுக் கல்வியில் பங்குண்டு. எனவே இலங்கை கூட்டுறவுசம்மேளனம் கல்வி பயிற்சி என்ற விடயங்களைப் பொறுத்தவரையில் முக்கிய நிறுவனமாக இருத்தல் வேண்டும். இப்பங்கை செய்வதற்கேற்ற முறையில் அதுதகுதியான முறையில் சீராக்கப்பட்டும் போதிய நிதி வசதிகள் செய்யப்படவும் வேண்டுமென சிபார்சுசெய்கின்றோம்'.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று முன்தினம் நடந்த வடபகுதி ஐக்கிய மேற்பார்வை சபையின் வருடாந்த கூட்டுறவு மகாநாட்டில், மக்கள் வங்கி தலைவர் திரு. ரி பி. பானபொக்கே பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

திரு. இராசரத்தினம் தலைமையில் நடைபெற்ற இம்மகாநாட்டில் திரு. பானபொக்கேமேலும் கூறியதாவது: உச்சிவியாபாரசம்மேளனத்தின் உதவியுடன் காலகெதியில் உறுதியானஆலோசனைச் சபையாக மாறுதல் சம்மேளனத்தின் நோக்கமாயிருத்தல்வேண்டும். அங்கத்தவர்களினதும் சமூகங்களினதும் கல்வி சம்பந்தமாகச் சம்மேளனம் சிறப்பாக கருமமாற்றல் வேண்டும். தேசிய கூட்டுறவு அபிவிருத்திச் சபையின் கொள்கைகள் அல்லது அங்கத்தவர்களின் வேண்டுதல்கள் காரணமாக புதிய சங்கங்களை உருவாக்குதல், பழையசங்கங்களில் புதிய கருமங்களை ஆரம்பித்தல் என்பனவற்றுக்குப் பொறுப்பாயிருத்தல் வேண்டும். இவைகூட்டுறவு விசாரணைச்சபையின் அறிக்கையில் கொடுக்கப்பட்ட கருத்துக்களில் ஒருசிலவாகும். உங்களுடைய ஆலோசனைக்காக இவற்றை உங்கள் ஐக்கிய சபையின்முன் சமர்ப்பிக்கின்றேன்.

4-ம பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

யாழ். வர்த்தகர் பாதுகாவல் சங்கத்திற்கு ஐந்து காவலாளர்கள் தேவை. விண்ணப்பகாரர்கள் கல்விஅறிவு நன்னடத்தை, திடகாத்திரம், 25க்கு மேல் 50க்கு உட்பட்ட வயது உடையவர்களாக இருத்தல் வேண்டும் இரு நற்சாட்சிப் பத்திரங்களுடன் 28-10-69க்கு முன் விண்ணப்பிக்கவும். நேர்முகப் பரீட்சை 1-11-69-ல் நடைபெறும். யாழ் வர்த்தகர் பாதுகாவல் சங்கம் அலுவலகம் 176, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். 1499

அரசாங்க அங்கீகாரம் பெற்ற கைத்தறிநிலையம் தேவை. லியோ டெக்ஸ் வீவிங் இன்டஸ்றீஸ், 45, ஜும்மா மொஸ்க்ஒழுங்கை, யாழ்ப்பாணம் 1100

### விற்பனைக்கு

காணி:

அனலைதீவு ஐயனார் கோவிலடி தெற்குப் பக்கம் ஐயர் வளவு 12 பரப்பும் கடைக் கட்டிடமும் கூழாவடிதோட்டம் 12 பரப்பும் நியாயமான விலைக்கு விற்கப்படும். கு. வி. தம்பித்துரை, 10, மெயின் வீதி, யாழ்ப்பாணம். 1497

### தேவை

மாநகரசபை எல்லைக்குள் மின்சாரவசதியுடன் கூடிய வீடொன்று தேவை. லியோ டெக்ஸ்வீவிங் இன்டஸ்றீஸ், 45, ஜும்மா மொக்ஸ் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 1601

2-ம் படிவம் வலதுகரை படித்தவாலிபர் ப.நோ.கூ. சங்கத்திற்கு முகாமையாளர் தேவை. கல்வித்தகைமைகள் குறைந்தது J. S. C. வகுப்பு சித்தி, கூட்டுறவுத் தராதரப் பத்திரம். வேதனம்;- 125 ரூபா ஆரம்பம். முடிவுதிகதி. 3-11-69. காரியதரிசி, 2-ம் படிவம், வலதுகரை படித்த வாலிபர் திட்டம், முத்தையன்கட்டு, ஒட்டுசுட்டான். 1502


**வெஸ்லி சினிமா**

மானிப்பாய்

தினசரி 6-30, இரவு 9-30

பிரிபோயா, போயா 2-30மணி

எம். ஜி. ஆர். - சரோஜாதேவி

நடித்த

**பறக்கும் பாவை**

(ஈஸ்மன் கலர்)

**ராஜா**

(யாழ்ப்பாணம்)

Daily 4-45, 7, 9-45 P.M.

Poya, Pre poya 10-30a.m.

Robert Antony,

Helene Channel

in

CROSS FAIRE IN CARACAS

(Adults only)

**தீபாவளி**

**ஜவுளி மலிவு விற்பனை**

**SRS**

**ஜவுளிமாளிகை**

எஸ். ஆர். செல்லத்துரை,

216, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

ரவிச்சந்திரன் ஜெயலலிதா நாகேஷ்

நடித்த

**அன்று கண்ட முகம்**


# இன்றைய பலன்

ஐப்பசிமாதம் 10ந் திகதி (26-10-69)

**சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை**

**மேஷம்**- எதிர்பார்த்தமுடிவில் ஏமாற்றம் தென்படும் உடன்பிறந்தவர்களாலேயே பல தொல்லைகள் தோன்றக் கூடும். சிலரின் கெடுபிடி நடவடிக்கை ஆத்திரத்தை ஏற்படுத்தலாம்

**ரிஷபம்**- ஒளிக்கதிர்கள் உங்கள் வாழ்க்கையில் பரவும். உல்லாசமாகப் பொழுதுபோக்கவிரும்புவீர்கள். குழந்தைகளினால் மகிழ்ச்சி உண்டு கணவன் மனைவி மத்தியில் அன்பு தவழும்.

**மிதுனம்**- உஷ்ணத்தின் தாக்குதல் உடலைப் பாதிக்கும். நயனரோகத்திற்கு இடமளியாது நடந்துகொள்ளவும். சகோதரர் நடவடிக்கை கவலையைத் தரும். சுகாதாரம்வேண்டும்.

**கடகம்**- உள்ளப்படுதாவில் உவகை கூத்தாடும். உறவினர்கள் உதவுவதற்கு முன்வருமார்கள். பத்திரிகைத் துறையில் தொழில்புரிவோர் பாராட்டுதல்களைப் பெறுவார்கள்.

**சிம்மம்**- நீண்டநாட்களின் பின்பு மகிழ்ச்சிகரமான சந்திப்பு இடம்பெறும். காதல்உலகில் நல்ல திருப்பங்கள் ஏற்படும். மற்றவர்களுக்கு உதவுவதில் முன்னணியில் நிற்பீர்கள். கனிவானதினம்.

**கன்னி**- விவசாயத்துறை கவலையைத் தரும். மனதில் உற்சாகம் குன்றும். கால்நடைகள் விடயத்தில் கவனமாக இருக்கவும். சகதொழிலாளர்களின் தொல்லைகள் தோன்றிமறையும்.

**துலாம்**- எதையும் ஏற்று நடத்தக்கூடிய மனத்திடம் ஏற்படும். குடும்பத்தில் தலைமைஸ்தானம் கிடைக்கும். இனியவை உரைத்தலின்மூலம் மற்றவர்களை வசீகரிப்பீர்கள். செல்வாக்கு வளரும்.

**விருச்சிகம்**- கடன்தொல்லைகள் கவலையைத்தரும். உறவினர்களுடன் பிணக்குகள் தோன்றும். நண்பர் ஒருவரின் நடவடிக்கை கவலையைத் தரலாம். புதிய முதலீடுகளை இன்று தவிர்ப்பதுடன் உஷாராக இருக்கவும்

**தனுசு**- பூமியால் இலாபம் உண்டு. புத்திரர் புகழும் சேரும். பொதுசனத் தலைமைக்கான வாய்ப்பும் கிடைக்கும். உடல்நலம் பாதிக்கப்படக்கூடுமாகையால் வாய்வுப் பதார்த்தங்களை நீக்கிக்கொள்ளவும்.

**மகரம்**- அந்தஸ்தில் உயர்வு தென்படும். எதிர்பார்த்த பதவிஉயர்வுக்கு இன்று முன்னோடி நடவடிக்கை எடுக்கப்படும். வழக்கு விவகாரங்களில் வெற்றி காணும்.

**கும்பம்**- விவாதத்திறமை உங்களைப் புகழின் உச்சிக்கு அழைத்துச் செல்லும், பொருள்வரவு திருப்திகரமாக இருக்கும். கணவன்மனைவியிடையே உறவுகள் பலப்படும். வழக்கறிஞர்களுக்கு வெற்றிதினம்.

**மீனம்**- குறுக்குவழித்தலையீடு உங்கள் கோபத்தைகிளறும். திடீர் நடவடிக்கைகள் மேற்கொள்வதன்மூலம் நீங்கள் வருந்த நேரிடலாம். மேலதிகாரிகளுடன் பகைத்துக்கொள்ளவேண்டாம்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### ஞாயிறு 26—10—69

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-18 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 41 மீ.

பகல் 12-00 செய்திச்சுருக்கம் 12-03 தொழிலா

## சிரமதானம்

அல்லைப்பிட்டி, சனி

தீவுப்பகுதி ஐக்கிய இளைஞர் முன்னேற்றக்கழகத்தினரால் சிரமதானம் மூலம் கிணறுகள் சுத்திகரிக்கப்பட்டு வருகின்றன.

# இரு பிரிவிலும் சென். பற்றிக்ஸ் ஹாட்லியை வென்றது

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிகுமிடையில் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் சென். பற்றிக்ஸ் இரு பிரிவுகளிலும் அமோகவெற்றி பெற்றது.

இந்த இரு கல்லூரிகளின் 'பி' பிரிவுகளுக்குமிடையில் முதலில் நடைபெற்றபோட்டியின் போது, சென். பற்றிக்ஸ் கோஷ்டியினர் ஆட்டம் ஆரம்பித்து 10 நிமிடங்களின் பின் கோல்களைப் போட ஆரம்பித்தனர். இக் கோஷ்டியினர் இடைவேளையின் போது 3 – 0 கோல்களைப் பெற்றிருந்தனர்.

இடைவேளையின் பின்னும் சென். பற்றிக்ஸ் கோஷ்டியினர் மேலும் ஐந்து கோல்களை மிக இலகுவாகப் போட்டனர். ஆட்டமுடிவில் 8—0 கோல்களால் ஹாட்லிக் கல்லூரியை வெற்றி பெற்றனர்.

### 'ஏ' பிரிவுப் போட்டி

இவ்விரு கல்லூரிகளின் 'ஏ' பிரிவுக் கோஷ்டிக்குமிடையிலான போட்டி ஆரம்பமாகியதும், சென். பற்றிக்ஸ் கோஷ்டியினர் கோல்களைப் போட ஆரம்பித்துவிட்டனர். இக் கோஷ்டி ஒரு கோலைப் பெற்றபோது ஹாட்லிக் கோஷ்டிக்கு கிடைத்த 'பெனல்டி'யை இவர்கள் பயன்படுத்தாது விட்டுவிட்டனர். இடைவேளையின் போது சென். பற்றிக்ஸ் 4—0 கோல்களைப் பெற்றிருந்தது.

இடைவேளையின் பின்னும் சென். பற்றிக்ஸ் கோஷ்டியின் வேகமான முன்னேற்றத்தை ஹாட்லிக் கோஷ்டியினரால் சமாளிக்க முடியவில்லை. சென். பற்றிக்ஸ் கோஷ்டியினர் மேலும் நாலு கோல்களைப் போட்டு 8—0 கோல்களால் ஹாட்லிக் கல்லூரியை வெற்றி பெற்றனர். சென். பற்றிக்ஸ் கோஷ்டியின் முன்னணி வீரர்களான கொண்ஸலஸ்-3, அன்ரன்-2, பெர்ணண்டோ-2, வர்ணகுலசிங்கம்-1 ஆகியோர் முறையே கோல்களைப் போட்டனர்.

இப் போட்டிக்கு திரு. ஈ. கே. குமரையா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர், (தே. நி)

## பரமேஸ்வராவும் இந்துவும் வெற்றி

புத்தூர், ஞாயிறு

பரமேஸ்வராக் கல்லூரிக்கும் யாழ். இந்துக் கல்லூரிக்கும் இடையே சிநேகபூர்வமாக நடைபெற்ற 3-ம் பிரிவுப் போட்டியில் பரமேஸ்வராக் கல்லூரி 5 கோல்களால் வெற்றியீட்டியது. இப் போட்டிக்கு திரு என். தேவபாலன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர் இப் போட்டி பரமேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

யாழ். இந்துவுக்கும் பரமேஸ்வராவுக்குமிடையில் நடைபெற்ற 2-ம் பிரிவுப் போட்டியில் யாழ். இந்து 3 கோல்களைப் போட்டு வெற்றியீட்டியது. பரமேஸ்வராக் காப்டன் வி. குகராசா, யாழ். இந்து காப்டன் கங்காதரன் ஆகியோரின் விளையாட்டு மிகவும் பாராட்டத்தக்கது. இப் போட்டிக்கு எஸ். ஜெயராசா மத்தியஸ்தம் வகித்தார்

## நவராத்திரி

புத்தூர், ஞாயிறு

யாழ். பரமேஸ்வராக் கல்லூரி கலைக்கழகத்தின் சார்பில் நடைபெற்ற நவராத்திரி விழாவில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி ஆசிரியை திருமதி வேதவல்லி கந்தையா 'சக்தி வழிபாடு' என்னும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றினர்.

## கேள்விப் பத்திர அறிவித்தல்

பின்வரும் அட்டவணைப் பிரகாரம், 1970-ம் ஆண்டிற்குக் காங்கேசன்துறைப் பட்டினசபைக்குத் தேவையான உபகரணங்கட்கு, கேள்விப் பத்திரப்பிணைப் பணமும், கேள்விப்பத்திர இணைப் பிரதிப் படிவ கட்டணமும் செலுத்துவதன் பிரகாரம், பின்வரும் உபகரணங்கட்கு கோரி, இணைப்பிரதிகளாகத் தயாரிக்கப்பட்டு, தலைவர் பட்டினசபை, காங்கேசன்துறை என முகவரியிடப்பட்டு வரும் கேள்விப்பத்திரங்கள் யாவும் 15-11-69-ந் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன்பதாக என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

| உபகரணப் பட்டியல் | கேள்விப்பத்திர வைப்புப்பணம் | கேள்விப்பத்திர படிவக்கட்டணம் |
|---|---|---|
| மின்சார உபகரணங்கள் | ரூபா 10/- | ரூபா 2/- |
| பொதுப் பண்டகசாலைப் பொருட்கள் | ரூபா 10/- | ரூபா 2/- |
| அலுவலகப் பாவிப்புப் பொருட்கள் | ரூபா 10/- | ரூபா 2/- |

மேற்படி கேள்விப்பத்திரப்படிவங்கள் 11-11-69-ந் திகதி நண்பகல் 12 மணிவரை வழங்கப்படும்.

கேள்விப் பத்திர வைப்புப் பணம் மட்டும் திருப்பிக் கொடுக்கப்படும்,

மேலதிக விபரங்கள் தேவைப்படின் மேற்படி சபையில், அலுவல நேரங்களில் சபைக் காரியதரிசியிடம் பெற்றுக்கொள்ளலாம்.

பட்டினசபை அலுவலகம், காங்கேசன்துறை.
22-10-69.

ஆ. வ. சதாசிவம்.
தலைவர்,
பட்டினசபை, காங்கேசன்துறை.

1451


**மைலன்ட்ஸ்**

115-117 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 7092

**தீபாவளி மலிவு விற்பனை**

23-10-69 தொடக்கம் 9-11-69 முடிய

உங்கள் அதிஷ்டத்தை எதிர்பாருங்கள்.


சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.

இனும்! 1-ம் பரிசு ரூ. 500

இனும்! 2-ம் பரிசு ரூ. 250

இனும்! 3-ம் பரிசு ரூ. 100

ரூபா 50 க்கும் அதற்கு மேலும் ஜவுளி வாங்குபவர்கட்குக் கிடைக்கும். பரிசு பில் இலக்கம் 25-11-69 'ஈழநாடு' தினசரியில் அறிவிக்கப்படும். 1803

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன் ஜெயலலிதா நாகேஷ்
நடித்த

# அன்று கண்ட முகம்

ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]

சிவாஜி – நிர்மலா
சௌகார் ஜானகி
நடித்த

# லக்ஷ்மி கல்யாணம்

வெற்றிமுரசு கொட்டும் 2-வது வாரம்

இங்ஸ்லி (கொழும்பு)

பிளாஸா (வெள்ளவத்தை)

வெலிங்டன்
[யாழ். நகர்]
தினசரி 2-30, 6-30, 9-30, போயா, பிரிபோயா 4 காட்சிகள்



★ ரவிச்சந்திரன்,
★ பத்மினி,
★ நாகேஷ்,
★ குமாரிசச்சு,

மற்றும் பலர் நடித்த

# எங்களுக்கும் காலம் வரும்

கதைவசனம்: பாசுமணி
டைரக்ஷன்: வின்ஸன்ட்
பாடல்கள்: கண்ணதாசன்-வாலி

சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-18 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 41 மீ. பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 தொழிலாளர்கேட்டவை, 1-00 திரைகானம், 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன்ட் 61 மீ. மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 இசைப்பயிற்சி, 6-30 கிராம சஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கர்னாடகஇசை, 7-35 விளையாட்டு, 7-45 வாத்திய இசை, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 செய்தித்திரட்டு, 10-10 நாதஸ்வரம், 10-30 செய்திச்சுருக்கம்.

## தண்டபாணி தேசிகருக்கு பரிசு

சென்னை, அக். 25

சங்கீதஅக்கடமியின் இந்த வருட இசைக்கான பரிசு திரு எம் எம் தண்டபாணி தேசிகருக்குவழங்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை
**றஞ்சனா தியேட்டர்**
தினசரி 2 30 6-30, 9-30.
சுந்தரராஜன் - பத்மினி
பேபிராணி
நடித்த
**குழந்தைக்காக**

**ஸ்ரீ காலிங்கா**
இணுவில்
தினசரி .6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
நடித்த
**அரசகட்டளை**

**REGAL JAFFNA**
Daily 4-45, 7 & 9-45 p.m.
David Niven, Lola Albright
in
THE IMPOSSIBLE YEARS
(adults)

**MANOHARA**
JAFFNA
Daily 4-45, 7-00 & 9-45 pm
Poya Prepoya 10-30 a. m.
THE ELUSIVE AVENGERS
(Scope-color)




ஓர் 14 அவு. யானை மார்க் ஒரேஞ் பார்லி போத்தல் உங்களுக்கு, நுரை பொங்கும் துல்லியமான 3 'கிளாஸ்', அதி தெம்பூட்டும் சுவை மிகுந்த, இன்றைய குளிர்பானச் சந்தையிலே எவராலும் பெறுதற்கரிய, அதி தூய்மையான உன்னத தர பானத்தை, இனிமையாக அளிக்கிறது. தாகத் தணிவுக்கு, அன்று முதல் – இன்று வரை – இல்லங்கள் அனைத்திலும் இப்பானம் அருந்தப் படுதற்குக் காரணம், இதுவே.

எலிபன்ட் ஹவுஸாரின்
ஓர் உயர்தர உற்பத்தி

# உங்களுக்கு சரியான சேவை

GRANT631259

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்பூதிரிபாட் அமைச்சு வீழ்ச்சி

# மார்க்ஸிஸ்ட் அல்லாத கட்சிகள் ஆட்சி அமைக்க முயற்சி

## காங்கிரஸ்கட்சி சேராதாம்

திருவனந்தபுரம், அக். 25

**கேரளத்தில் மார்க்ஸிஸ்ட் அல்லாத நான்கு கட்சிகள் சேர்ந்து கூட்டணி அரசொன்றை நிறுவுவதற்கு முயற்சி எடுத்து வருகின்றன. மார்க்ஸிஸ்ட் கட்சிகளின் ஆதரவு இல்லாமல் ஆட்சியை அமைக்கமுடியும் என்று நான்கு கட்சிகளும் ராஜ்ய கவர்னரிடம் தனித்தனியே கருத்து வெளியிட்டிருக்கின்றன.**

**ஆட்சி அமைப்பது பற்றிய தமது முடிவுகளை 30 ம் திகதிக்குள் தமக்குத் தெரிவிக்கும்படி கவர்னர் இந்தக் கட்சிகளிடம் தெரிவித்திருக்கிறார்.**

கேரளத்தில் நம்பூதிரி பாட்டின் கூட்டணி ஆட்சி கவிழ்ந்ததைத் தொடர்ந்து அங்கு ஜனாதிபதி ஆட்சி ஏற்படக்கூடியநிலை ஏற்பட்டு விட்டதாக கருதப்படுகின்றது ஆனால்ஜனாதிபதிஆட்சி ஏற்படாமல் செய்வதற்கு மார்க்ஸிஸ்ட் அல்லாத கட்சிகள் முயற்சி எடுத்துவருகின்றன. நம்பூதிரி பாட் அரசிலிருந்த நான்கு மந்திரிகள் மீது லஞ்ச ஊழல் புகார்கள் தெரிவிக்கப்பட்டிருந்தது. இவர்களில் சுகாதாரஅமைச்சர் திரு. லெஸ்டன் மீதான லஞ்சப் புகார்கள் மீது நீதி விசாரணை நடத்த் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கூட்டணியிலிருந்த கட்சிகள் கேட்டுக்கொண்டன. ஆனால் திரு. நம்பூதிரிபாத் லஞ்ச ஊழல் தெரிவிக்கப்பட்ட மந்திரிகள் நால்வர் மீதான குற்றச்சாட்டுகள் பற்றியும் விசாரணை நடத்துவதற்கு ஏற்பாடுசெய்தார். இதைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட நான்கு கட்சிகளைச் சேர்ந்த மந்திரி (வெலிடன் உட்பட) ஏழு பேர் ராஜினாமா செய்தார்கள் இதைத் தொடர்ந்து திரு: நம்பூதிரி பாட்மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவரப் படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவர் மீதுள்ள லஞ்ச ஊழல்கள் பற்றியும் விசாரணை செய்யப்படவேண்டும் என்று கோரி தாக்கல் செய்யப்பட்ட தீர்மானம் சபையில் [illegible]

கூறி முதலமைச்சர் திரு. நம்பூதிரிபாட் ராஜினாமா செய்தார்.

இதைத்தொடர்ந்து இப்பொழுது கேரள சட்டசபை கலைக்கப்படுமா அல்லது புதிதாக ஓர் ஆட்சியை வேறு கட்சிகளால் உருவாக்கமுடியுமா என்ற கருத்து உருவாகியிருக்கின்றது.

மார்க்ஸிஸ்ட் அல்லாத கட்சிகள் கூட்டுமுன்னணியொன்றை உருவாக்கும்பட்சத்தில் காங்கிரஸ் கட்சியினரை சேர்த்துக்கொள்ள முயற்சிசெய்யமாட்டார்கள் என்று தெரிகின்றது. காங்கிரஸ் கட்சியினரும் கூட்டணி ஆட்சியில் சேர்ந்துகொள்ள எத்தனிப்பதாகத் தெரியவில்லை.

மார்க்ஸிஸ்ட் அல்லத கட்சிக ஆட்சி நிறுவினால் அதனை ஆதரிப்பதாகவும் ஆனால் அதனுடன் சேர்ந்து கொள்ளப்போவதில்லையென்றும் காங்கிரஸ் தலைவர்கள் கூறியிருக்கின்றனர்,

### வாச்பாய் வரவேற்பு

நம்பூதிரிபாட்டின் அரசு கவிழ்ந்ததை ஜனசங் தலைவர் அடல்விகாரிவாச்பாய் வரவேற்றிருக்கிறார். கேரள மக்களுக்கு விடுதலை கிடைத்திருப்பதாக அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

### டாங்கே குற்றச்சாட்டு

கேரளத்தில் மார்க்ஸிய வாதிகள் லஞ்சத்துக்கும், சந்தர்ப்பவாதத்துக்கும் இடம் கொடுத்து மிகவும் [illegible]

தலைவர் திரு. டாங்கே கூறியிருக்கிறார்.

கேரளத்தில் ஆட்சிக்கு எதிராக அரசியல் கட்சிகள் சதிசெய்ததாகவும் அதே முறையில் மேற்கு வங்கத்தில் சதிகள் நடப்பதாகவும் மார்க்ஸிய கம்யூனிஸ் கட்சியின் பொலிட்பிரோ அறிக்கை விடுத்திருக்கிறது.

---

## பெரியார் மீண்டும் ஆஸ்பத்திரியில்

வேலூர், அக். 25

திராவிடக் கழகத் தலைவர் ஈ.வே ரா.பெரியார் செவ்வாழ்க்கிழமை காலை மீண்டும் வேலூர் சி. எம். சி. ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சிறுநீர்க் குழாயில் ஏற்பட்ட கோளாறு காரணமாகத் திராவிடக் கழகத் தலைவர் ஈ. வே. ரா பெரியார் சமீபத்தில் சத்திரசிகிச்சை பெற்றிருந்தது தெரிந்ததே சிறுநீர் கழிக்க அவருக்கு 'டியூப்' பொருத்தப்பட்ட இடத்தில் வலியேற்பட்டதன் காரணமாக அவர் திரும்பவும் வேலூர் மருத்துவசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது

மாதத்திற்கு ஒருமுறை மேற்படி 'டியூப்'பை மாற்றிக்கொள்ளவேண்டும் என அவருக்குச் சிகிச்சையளிக்கும் டாக்டர்கள் கூறியுள்ளார்கள்.

---

வீராங்கனை

## தில்லையாடிவள்ளியம்மை நகர் உருவாகின்றது

### முதலமைச்சர் அடிக்கல்நாட்டினார்

மாயவரம், அக். 25

மாயவரத்துக்கு அருகே அமைக்கப்படவிருக்கும் 'தில்லையாடி வள்ளியம்மை நகருக்கு' தமிழகமுதலமைச்சர் திரு கருணாநிதி அடிக்கல் நாட்டினார்.

ஆபிரிக்காவில் மகாத்மா காந்தியின் இக்கிராமத்தைச் சேர்ந்த வள்ளியம்மை நாகப்பன் நாராயணசாமி ஆகியோர் அறப்போரில் உறுதுணையாக இருந்து உயிர்த்தியாகம் செய்தவர்கள் அவர்கள் ஞாபகச் சின்னமாக மேற்படி நகர் நிறுவப்படுகிறது.

சுமார் ஏழரை லட்சம் ரூபா செலவில் நிறுவப்படும் இந்நகருக்குத் தமிழக அரசு ஐந்து லட்சம் ரூபா வழங்கவிருக்கிறது.

வியாழக்கிழமையன்று தில்லையாடியில் நடைபெற்ற 'வள்ளியம்மைநகர்' அமைப்புத் தொடக்கவிழாவில் அந்நகருக்கு அடிக்கல் நாட்டிவைத்துப் பேசிய முதல் அமைச்சர் திரு. மு. கருணாநிதி 'இந்த ஊரில் தியாக முத்திரை பதித்த வீரர்களும் வீராங்கனைகளும் வாழ்ந்துள்ளார்கள். அவர்களது வரலாற்றுச் சிறப்பாக ஒரு நகரம் உருவாவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்' என்றார்.

அவர்மேலும் தொடர்ந்து பேசுகையில் நான் முதலமைச்சர் பதவியில் இல்லாதபோது இவ்வூருக்கு வந்தேன் அப்பொழுது எனக்கேற்பட்ட ஆசை இன்றுமுதல் அமைச்சராக நான் இருக்கும் போது நிறைவேற்றப்படுகிறது தில்லையாடி ஊர் தமிழ் நாட்டிலேயே ஒரு 'மாதிரி ஊராக'த் திகழ வேண்டும் என்றார்.

சட்டமன்ற உறுப்பினர் எஸ். கணேசன், என். கிட்டப்பா, கே. பி. எஸ். மணி, பாரதிமோகன் ஆகியோரும் இவ்விழாவில் கலந்து கொண்டு உரையாற்றினர்.

---

காங்கிரஸ் கட்சி நெருக்கடி

# நிஜலிங்கப்பா நிலைமை தர்மசங்கடம்?

புதுடில்லி, அக். 25

காங்கிரஸ் காரியக்கமிட்டி அடுத்த மாதம் முதலாம் திகதி நடைபெறவிருப்பதால் அதற்குப் பின் எழக்கூடிய நிலைமை குறித்து காங்கிரஸ் தலைவர்கள் பரபரப்படைந்துள்ளார்கள். திரு. நிஜலிங்கப்பாவைத் தலைவர் பதவியிலிருந்து [illegible]

மாதிரி ஒரு நிலைமை ஏற்படுவதை திரு. நிஜலிங்கப்பா விரும்புவாரா இல்லையா என்று தெரியவில்லை ஆனால் கட்சியிலேயே தமக்கு விரோதமாகத் தீர்மானம் ஏதும் நிறைவேற்றப்படுவதற்கு முன்பதாக அவர் பதவியிலிருந்து விலகிக்கொள்ளக்கூடும் என்றும் கூறப்படு [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

---

## பிரி சிறையில் கைதிகள் ரகளை

லண்டன், அக். 26

பிரிட்டிஷ் சிறைச்சாலை ஒன்றில் கைதிகள் ஆர்ப்பாட்டம் செய்தனர். ஆனால் சிலமணி நேரத்துக்குள் நிலைமையைப் பொலிஸார் கட்டுப்படுத்தினர். பிரிட்டிஷ் சிறையிலிருந்த சோவியத் கைதி ஒருவர் விடுவிக்கப்பட்டதே இந்த ஆர்ப்பாட்டதற்குக் காரணமென்று கூறப்படுகின்றது.

---

அம்பாறைக்கு

## பட்டினசபை அந்தஸ்து

அம்பாறை, சனி

அம்பாறைமாவட்டத்தின் நிர்வாக ஸ்தலமாக விளங்கும் அம்பாறை நகரம் விரைவில் உள்ளூராட்சி மன்ற அந்தஸ்தைப் பெறவிருக்கிறது.

அம்பாறை அரசாங்க அதிபர் மற்றும் அங்குள்ள உள்ளூராட்சி இலாகா அதிகாரிகள் ஆகியோர் சமீபத்தில் அம்பாறை கச்சேரியில் கூடி ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தி சபையின் நிர்வாகத்தில் இருக்கும் அம்பாறை நகரத்தின் நிர்வாகத்தை மத்திய அரசாங்கம் பொறுப்பேற்று உள்ளூராட்சி சேவை ஆணைக்குழுவின் கீழ் அமைக்க வேண்டுமெனத்தீர்மானித்துள்ளனர்

அம்பாறை நகர் ஏழு வட்டாரங்களாகப்பிரிக்கப்பட்டு அதற்கு பட்டினசபை அந்தஸ்து வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமெனவும் மேற்படி கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதோடு இது சம்பந்தமான தஸ்தாவேஜுகள் உள்ளூராட்சி அமைச்சருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

---

## மாலைதீவு மீனவர் மன்னாரில் கைது

யாழ்ப்பாணம், ஞாயிறு

மாலைதீவைச் சேர்ந்த ஆறு கடற் தொழிலாளர் மன்னாரில் வைத்து சென்ற புதன்கிழமைபொலிஸாரால் கைது செய்யப்பட்டார்கள்.

சட்டவிரோதக் குடியேற்றக்காரர்கள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இவர்களை சிலாபத்துறை என்ற [illegible]

---

## 'இரத்ததானம் செய்யுங்கள்'

யாழ்ப்பாணம், ஞாயிறு

'தானங்களில் சிறந்தது இரத்ததானம்' தான் என்றும், உயிருக்காகப் போராடும் பல நோயாளிகளுக்கு பொதுமக்கள் அனைவரையும் இரத்ததானம் செய்ய முன் வருமாறும் யாழ். ஆஸ்பத்திரி இரத்தவங்கி அதிகாரி டாக்டர்பிலிப்பையா பொது மக்களுக்கு வேண்டுகோள் ஒன்று விடுத்துள்ளார்.

சனசமூக நிலையங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள், கல்லூரி மாணவர்கள், ஆகியோர் தினசரி யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு இரத்ததானம் செய்து வருகின்றார்கள்.

இதுதவிர டாக்டர் பிலிப்பையாவும், பிரச்சார உத்தியோகஸ்தர் திரு. சிவரத்தினமும் ஒவ்வொரு காரியாதிகாரி பிரிவுதோறும் தினசரி சென்று இரத்தம் சேகரித்து வருகின்றார்கள்.

இதனால் யாழ் ஆஸ்பத்திரியில் நிலவிவந்த இரத்தக் கட்டுப்பாடு இப்போது ஓரளவு நீங்கி விட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(கா. நி.)

---

## 'முன்னோரளித்தசெல்வங்களை பாதுகாக்க வேண்டும்'

மட்டுவில், சனி

''உயர்ந்தமலைகளும், மரங்களும் உள்ள ஒரு நாட்டில் தான் மழைவளம் சிறந்து, பஞ்சம்பசியற்றநல்லவாழ்வு வாழமுடியும். எனவேதான் எமது மூதாதையர், உயர்ந்த மரங்களான, பனை, இலுப்பை வேம்பு, புளி போன்ற விருட்சங்களை உண்டுபண்ணி எமக்கு ஏற்ற நிதியாக விட்டுச் சென்றுள்ளனர். நாம் நம் முன்னோரளித்த அரும்பெருஞ்செல்வங்களைப் பாதுகாக்க வேண்டும்''

இவ்வாறு நுணுவில் மணங்குணாய் பிள்ளையார்வீதியில் நடைபெற்ற மரம்நாட்டு விழாவுக்குத் தலைமைதாங்கி பேசிய தென்மராட்சி காரியாதிகாரி திரு. இ. சிதம்பரப்பரப்பிள்ளை கூறினார்.

இந்த மரம்நாட்டு விழாவில், தென்மராட்சி கிராம விஸ்தரிப்பு உத்தியோகத்தர் திரு. ஏ. ஜெயரத்தினம், விவசாய போதனாசிரியர் திரு. ஈ. ஆர். கனகசபை, கிராம சேவையாளர் திரு. குமாரசாமி உட்பட பலர் உரை நிகழ்த்தினர்.

நுணுவில் அமிர்தாம்பிகை வித்தியாசாலை, கணேசவித்தியாசாலை ஆசிரியர், மாணவர் அனைவரும் கலந்து கொண்டு மேற்படிவிதைகளை ஊர்வலமாக சுலோக அட்டைகளுடன் கொண்டுசென்றனர்.

மணங்குணாய் பிள்ளையார் வீதியில்நடைபெற்ற இந்த விழாவில் சுமார் 2000பனம் விதைகளும், இலுப்பை, வேம்பு. புளி ஆகிய விதைகளும் நாட்டப்பட்டது. திரு சிதம்பரப்பிள்ளை தொடர்ந்து பேசுகையில் 'நாம்எமது நாட்டில் மரங்களை அழிய விட்டதன்பயனை நன்குஅனுபவித்துவிட்டோம். இனியாவது இத்தவறுகளைச்செய்யாது விருட்சங்களை உண்டு பண்ணுவதில் முனைவோம். இதுநமது பாரிய கடமை' என்றார். ......

## சிரமதானத்தினால் ரூ. 25,000 மிச்சம்

மினுவாங்கொடை, சனி

மினுவாங்கொடைகாரியாதிகாரி பிரிவுக்குள் உள்ள சிரமதான இயக்கங்கள் பொதுவேலைகளில் ஈடுபட்டு அரசாங்கத்துக்கு ரூபா. 25,000 மீதப்படுத்திக் கொடுத்துள்ளன.

இப்பகுதியிலுள்ள 22சிரமதான இயக்கங்கள் ஒன்று சேர்ந்து பல வீதிகளைத் திருத்தியும், புதிய சிறிய வீதிகளையமைத்தும், நீர்ப்பாசன கால்வாய்களைத் துப்பரவுசெய்தும் அப்பகுதியை முன்னேற்றியது மட்டுமன்றி அரசாங்கத்தின் செலவையும் குறைத்துள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## ஏற்புக்கு சிறுவன் பலி

யாழ்ப்பாணம், ஞாயிறு

ஏற்புக்கு மூன்றரை வயதான சிறுவன் பலியானார். சாவகச்சேரியைச் சேர்ந்த எம். சுப்பிரமணியம் என்ற சிறுவன் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு நேற்றுக்காலை மரணமானார். மர [illegible]

---

## 'பிரிக்க முடியாதவை'

சித்தன்கேணி, சனி

'சைவமும் தமிழும் பிரிக்க முடியாதவை. கல்வி, செல்வம், வீரம் ஆகிய மூன்றும் மனிதகுலம் வையத்தில் வாழ்வாங்குவாழ அவசியமானவை.

இவ்வாறு வட்டுப்-பிளவத்தை சனசமூக நிலையம் நடத்திய கலைமகள் விழாவில் சிறப்புரையாற்றிய வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி விரிவுரையாளர் திரு. [illegible]

படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவர் மீதுள்ள லஞ்ச ஊழல்கள் பற்றியும் விசாரணை செய்யப்படவேண்டும் என்று கோரி தாக்கல் செய்யப்பட்ட தீர்மானம் சபையில் நிறைவேற்றப்பட்டதால், இது நம்பிக்கையில்லா தீர்மானத்துக்கு ஒப்பாகும் என்று

இருப்பதாக அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

## டாங்கே குற்றச்சாட்டு

கேரளத்தில் மார்க்ஸிய வாதிகள் லஞ்சத்துக்கும், சந்தர்ப்பவாதத்துக்கும் இடம் கொடுத்து மிகவும் கீழ் நிலைக்கு வந்து விட்டதாக கம்யூனிஸ்ட் கட்சியின்

துவசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

மாதத்திற்கு ஒருமுறை மேற்படி 'டியூப்'பை மாற்றிக்கொள்ளவேண்டும் என அவருக்குச் சிகிச்சையளிக்கும் டாக்டர்கள் கூறியுள்ளார்கள்.

அடுத்த மாதம் முதலாம் திகதி நடைபெறவிருப்பதால் அதற்குப் பின் எழக்கூடிய நிலைமை குறித்து காங்கிரஸ் தலைவர்கள் பரபரப்படைந்துள்ளார்கள். திரு. நிஜலிங்கப்பாவைத் தலைவர் பதவியிலிருந்து விலக்குவதற்கு பிரதமர் இந்திராவின் சார்பான கோஷ்டியினர் மும்முரமாக நடவடிக்கைகளில் இறங்கியிருப்பதால் அவர்களுடன் நேரடியாகவே மோதலில் இறங்குவதா இல்லையா என்பது பற்றி காங்கிரஸ் தலைவர்கள் ஆலோசித்து வருகின்றனர்.

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டதைக் கூட்டும்படி காரியக்கமிட்டிக் கூட்டத்தில் வற்புறுத்துவதற்காக இந்திரா குழுவினர் சுமார் 500க்கு மேற்பட்ட காங்கிரஸ் கமிட்டி அங்கத்தவர்களிடம் கையெழுத்து சேர்த்துவிட்டதாகத் தெரிகின்றது. காங்கிரஸ் காரியக்கமிட்டிக் கூட்டத்தைக் கூட்டும்படி அதிகப்படியான அங்கத்தவர்கள் கோரும் பட்சத்தில் அதனை அலட்சியம் செய்ய முடியாதென்று சுட்டிக்காட்டப்படுகின்றது. காங்கிரஸ் கமிட்டியை விரைவில் கூட்டும்படி பிரதம மந்திரியும் அவரைச் சார்ந்தவர்களும் கடிதம் மூலம் கோரிய பொழுது அதனை தலைவர் நிஜலிங்கப்பா நிராகரித்துவிட்டார். காங்கிரஸ் கமிட்டி கூடுவது பற்றி காரியக் கமிட்டியே தீர்மானிக்கவேண்டும் என்று அவர் கூறியிருந்தார். இதே சமயம் காரியக்கமிட்டியில் பிரதமர் குழுவின் பலத்தைக் குறைக்கும் வகையில் அவர் நடவடிக்கைகளும் எடுத்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. இதன் காரணமாக காங்கிரஸ் கமிட்டியை விரைவிலேயே கூட்டுவதற்கு நிஜலிங்கப்பாவை வற்புறுத்தும் வகையில் காரியக் கமிட்டியில் தீர்மானம் கொண்டுவருவதற்கும் அந்தத் தீர்மானத்துக்கு சாதகமாக காங்கிரஸ் கமிட்டி அங்கத்தவர்களில் பெரும்பாலானவர்களின் சம்மதத்தைப் பெறுவதற்கும் இந்திரா குழுவினர் முயற்சி எடுத்து வருகின்றனர்.

காங்கிரஸ் கமிட்டியை விரைவில் கூட்டவேண்டும் என்று காரியக்கமிட்டி முடிவுசெய்யும் பட்சத்தில் திரு. நிஜலிங்கப்பாவின் நிலைமை தர்மசங்கடமாகலாமென்று கூறப்படுகின்றது. காங்கிரஸ் கமிட்டியைவிரைவில் கூட்டும்படி கைச்சாத்திட்ட அதிகப்படியான அங்கத்தவர்களே திரு. நிஜலிங்கப்பாவுக்கு எதிராகவும் வாக்களிக்கக்கூடுமென்று கருதப்படுகின்றது. அந்த

விரும்புவாரா இல்லையா என்று தெரியவில்லை ஆனால் கட்சியிலேயே தமக்கு விரோதமாகத் தீர்மானம் ஏதும் நிறைவேற்றப்படுவதற்கு முன்பதாக அவர் பதவியிலிருந்து விலகிக்கொள்ளக் கூடும் என்றும் கூறப்படுகின்றது. ஆனால் திரு. காமராஜர் போன்றவர்களின் தூண்டுதலின் பேரில் கடைசிவரை நிலைமையை எதிர்கொண்டு பார்த்துவிடவும் அவர் முடிவு செய்யலாம் என்றும் கருதப்படுகின்றது.

இந்த அடிப்படையிலேயே அண்மையில் திரு. நிஜலிங்கப்பா தென்ராஜ்ய காங்கிரஸ் தலைவர்களுடன் ஆலோசனைகள் நடத்தியதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

முன்னாள் காங்கிரஸ் தலைவர் திரு காமராஜ், முன்னாள் சபாநாயகர் திரு. சஞ்சீவரெட்டி திரு. எஸ். என். மிஸ்ரா, திரு. எஸ் குருபாதசுவாமி ஆகியோருடன் திரு. நிஜலிங்கப்பா ஆலோசனை நடத்தியிருக்கிறார்

## மத்திய மந்திரியுடன் கருணாநிதி ஆலோசனை

சென்னை, அக் 25

மத்திய இரும்பு இலாகா மந்திரிபூனச்சா செவ்வாய்க்கிழமையன்று சென்னை வந்து முதல் அமைச்சர் கருணாநிதியைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார், சேலம் இரும்புத்தொழிற்சாலைத் திட்டம்பற்றி இருவரும் பேச்சு நடத்தினார்கள்.

பேச்சுவார்த்தைகள் முடிவுற்றதும் பூனச்சா பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையில் சேலம் இரும்பு தொழிற்சாலை அமைப்பது பற்றிய எல்லா தகவல்களையும் பரிசீலனை செய்துவிட்டோம். இதற்கான பணம் ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலையின் ஆரம்பவேலைகளைத் தொடங்க மாநில அரசு உடன் நடவடிக்கை எடுக்கும்எனத் தெரிவித்தார்.

முதலமைச்சர்திரு. கருணாநிதி பேசுகையில் தொழிற்சாலை சம்பந்தமான மேற்படி பேச்சுவார்த்தை திருப்தியாக முடிவுற்றதை யிட்டு தான் மகிழ்ச்சியடைவதாகவும் மந்திரி பூனச்சா இப்பேச்சுவார்த்தைக்காகவே சென்னை வந்து நல்ல முடிவு செய்துள்ளமைக்கு அவருக்கு நன்றிகூறுவதாகவும் குறிப்பிட்டார்.

## மோதிரத்தின் விலை ரூ. 78 லட்சம்

நியூயோர்க், அக். 24

நியூயோர்க்கில் ஒரு வைர மோதிரம் ரூ. 78 லட்சத்துக்கு மேல் விற்பனையாகியுள்ளது.

மன்னாரில் வைத்து சென்ற புதன்கிழமைபொலிஸாரால் கைது செய்யப்பட்டார்கள்.

சட்டவிரோதக் குடியேற்றக்காரர்கள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இவர்களை சிலாபத்துறை என்ற இடத்தில் வைத்து மன்னார் பொலிஸார் கைது செய்தனர்.

கைதான அறுவரும் மாலைதீவைச் சேர்ந்த மீன்பிடிகாரர் என்றும் கடும்காற்று காரணமாக இவர்கள் திசைமாறிவந்ததாகவும் விசாரணையின்போது தெரியவந்தது.

மன்னார் சட்டவிரோதக் குடியேற்றத் தடுப்புப்

தான சிறுவன் பலியானார். சாவகச்சேரியைச் சேர்ந்த எம். சுப்பிரமணியம் என்ற சிறுவன் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு நேற்றுக்காலை மரணமானார். மரணவிசாரணை நடாத்திய மரணவிசாரணை அதிகாரி திரு. என். இராசநாயகம் ஏற்பினால் ஏற்பட்டமரணம் எனத் தீர்ப்பளித்தார்.

பொலிஸ் பகுதியினர் விசாரணை நடத்திவருகின்றனர். கைதான அறுவரும் மன்னார் தடுப்புமுகாமில் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

(கா. நி)

வாழ்வாங்குவாழ அவசியமானவை.

இவ்வாறு வட்டுப்-பிளவத்தை சனசமூக நிலையம் நடத்திய கலைமகள் விழாவில் சிறப்புரையாற்றிய வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி விரிவுரையாளர் திரு. த சுப்பிரமணியம் கூறினார். இவ்விழா வட்டுக்கோட்டை ஊர்மன்றத் தலைவர் திரு ச நிற்சிங்கம் தலைமையில் நடைபெற்றது.

பண்டத்தரிப்பு அ மி பாடசாலைத் தலைமையாசிரியர் திரு இ பேரம்பலம், ஊர்மன்ற உறுப்பினர் திரு க வேலாயுதம்பிள்ளை நிலைய மாணவ மாணவிகள் ஆகியோரும் பேசினர்.

# மண்டலசார்பற்ற நாடுகள் கூட்டத்தில் பாக். பிரதிநிதி

# இந்தியா வெளிநடப்பு

புதுடில்லி, அக். 25

நியுயோர்க்கில் இடம் பெற்ற மண்டலசார்பற்ற நாடுகளின் சாதாரணக் கூட்டமொன்றில் பாகிஸ்தான் கலந்துகொண்டது பற்றி இந்தியா ஆச்சரியம் தெரிவித்திருக்கிறது.

பாகிஸ்தான் மண்டல சார்பற்ற நாடு அல்ல, அது மண்டல சார்பற்ற நாடென்றால் ராணுவக்கூட்டுகளிலிருந்து அது விலகிவிடவேண்டும் என்று இந்தியா கருதுகின்றது. நேற்று நடைபெற்ற மண்டல சார்பற்ற நாடுகளின் சாதாரணக்கூட்டத்தில் பாகிஸ்தான் கலந்துகொண்டதை ஆட்சேபித்து இந்தியா வெளியேறியது.

இந்தக்கூட்டத்துக்கு எதியோப்பிய பிரதிநிதி தலைமை வகித்தார். ஆனால் இந்தக் கூட்டத்தை யார் அமைத்தது என்று தெரியவில்லை பாகிஸ்தான் அழைக்கப்பட்டதற்கு தாம் பொறுப்பல்லவென்று எதியோப்பியாவும் யூகோஸ்லாவியாவும் கூறியிருக்கின்றன ஏற்கனவே நடைபெற்ற மண்டல சார்பற்ற நாடுகளின் ஆலோசனைக் கூட்டத்துக்கும், மண்டல சார்பற்ற நாடுகளின் வெளிநாட்டு அமைச்சர்கள் கூட்டத்துக்கும் பாகிஸ்தான் அனுமதிக்கப்படவில்லை.

பாலஸ்தீன கொமாண்டோ பிரச்னை

# லெபனன் குற்றச்சாட்டை சிரியா நிராகரித்தது

டாமஸ்கஸ், அக். 25

லெபனனில் பாலஸ்தீன கொமாண்டோக்கள் நடத்திய தாக்குதல்களுக்கு சிரியா ஆதரவு அளித்துள்ளதாக லெபனன் குற்றஞ்சாட்டியதை சிரியா நிராகரித்துள்ளது.

சிரியா தனது லெபனனுடனுள்ள எல்லையை ஏற்கனவே மூடிவிட்டிருக்கிறது. இப்பகுதியில் புதிதாகவும் ஓர் இடத்தில் லெபனன் காவல் நிலையம் தாக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

### ஆர்ப்பாட்டத்தில் 7 பேர் பலி

நேற்று மேற்கு லெபனனில் அரபுக்கொமாண்டோக்களுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன இந்த ஆர்ப்பாட்டங்களின் போது பாலஸ்தீன கொமாண்டோக்களுக்கும் லெபனன் காவல்படையினருக்குமிடையில் இடம்பெற்ற சண்டையில் குறைந்தது ஏழு பேர் பலியாகியதாகக் கருதப்பட்டது.

இதற்கிடையில் லெபனனிலுள்ள முஸ்லிம் தலைவர்களை ஆலோசனை கலப்பதற்கு வரும்படி லெபனன் அதிபர் அழைத்திருக்கிறார். லெபனனிலுள்ள பாலஸ்தீன கொமாண்டோக்கள் காவல்படையினருடன் பொருதுவதை நிறுத்திக் கொண்டால் அவர்கள் மீது தாக்குதல் நடத்துவதை நிறுத்திவிட இணங்குவதாக அதிபர் தெரிவித்திருப்பதாகத் தெரிகின்றது.

பேய்ரூட்டில் அமுல் நடத்தப்பட்டுவந்த ஊரடங்குச் சட்டம் இங்கு சற்றுத்தளர்த்தப்பட்டது

### இஸ்ரேல் துணைப்பிரதமர் கருத்து

லெபனனில் வெளியார் தலையிட்டு அங்கு ஆட்சியைக் கவிழ்த்து வேறு ஆட்சியை ஏற்படுத்த முனைவதை இஸ்ரேல் வெறுமனே பார்த்துக் கொண்டு இருக்கப்போவதில்லையென்று இஸ்ரேலிய துணைப் பிரதம மந்திரி திரு. அலன் நேற்று தேர்தல் கூட்டமொன்றில் கூறினார். இந்தக் கருத்துப்பற்றி அமெரிக்கா கவலைகொண்டிருக்கிறது. இந்தக் கருத்து எந்தவகையிலும் அமைதிக்குதவப்போவதில்லையென்று அமெரிக்க அதிகாரி ஒருவர் கூறினார்

### தென் யேமன் நடவடிக்கை

பாலஸ்தீன கொமாண்டோக்களுக்கு எதிரான அமெரிக்கப் போக்கை ஆட்சேபித்து தெற்கு யேமன் அமெரிக்காவுடனான உறவுகளை முறித்துக் கொண்டு விட்டது. ஏடனிலிருக்கும் அமெரிக்கர்கள் அனைவரையும் வெளியேறும்படி தெற்கு யேமன் அரசு உத்தரவிட்டிருக்கின்றது


# ஹெடோனல்



## களைகளை ஒழித்து, பயிர்களைக் காத்து, வருவாயைப் பெருக்கும்

BAYER



ஹெடோனல் அதிசிறந்த களைகொல்லி. வயல்களில்-குறிப்பாக நெல்வயலில்-தலைதூக்கும் சகல அகன்ற இலைக் களைகளையும், சிக்கனமாக, உடனடியாக, முற்றாக, அழித்தொழிக்க வல்லது ஹெடோனல்! நெல்வயலில், விதைத்து 3-7 வாரத்துள் அதைப் பாவிக்க வேண்டும்.

ஹெடோனல், விளைச்சலை வெகுவாகப் பெருக்கும்.

அது இரண்டு ரகங்களிற் கிடைக்கும்.

ஹெடோனல் "எம்" - 40% எம். சீ. பீ. ஏ. கொண்டது.

ஹெடோனல் "டீ" - 55% 2.4 டீ கொண்டது

சிக்கனமாக, சிறப்பாகப் பயிர்களைக் காப்பது -ஹெடோனல். அது, களவு செய்ய முடியாத போத்தலிற் கிடைக்கும்.

உற்பத்தியாளர்:
பேயர்
லீவர்கூசன்
மேற்கு ஜெர்மனி

இலங்கையில் விநியோகஸ்தர்:
ஹேக்கெம் லிமிட்டெட்
400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

காரணங்களை ஆராய்ந்து பார்த்து சிந்தனைசெய்த பின்னர் பெருந்தன்மையும் நிதானமும் பெறவேண்டும்
— மகாத்மாகாந்தி.

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna
Post Box 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் ஐப்பசி மாதம் 10-ந் திகதி (26-10-69)

## இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்

தென்கிழக்கு ஆசியாவிலேயே மிகப்பெரிய தொழிற்சங்கமாக விளங்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் 23-வது மகாநாடு அட்டனிலே திரு. எஸ். தொண்டமானின் தலைமையில் நடைபெற்றபோது அவர் தோட்டத்தொழிலாளரின் பல குறைகளையும் தமது தலைமைப்பிரசங்கத்திலே எடுத்து விளக்கியுள்ளார்.

முப்பது ஆண்டுகளுக்கு முன்பாக தோட்டத்தொழிலாளர் இங்கு அடிமைகளாக வாழ்ந்த நிலைமையுடன் ஒப்பிடுகையில் இன்று அவர்கள் நிலைமை பெரிதும் உயர்ந்துள்ளதென்பதில் ஐயமில்லை. நேருஜீயின் யோசனை மீது இங்கு ஆரம்பித்த இலங்கை இந்தியர் காங்கிரஸ்தான் நாடு விடுதலையடைந்தபின், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸாக மாறியது. இந்த ஸ்தாபனமும் அதன் பல தலைவர்களும் சிறப்பாக திரு. தொண்டமானும் இதன் வளர்ச்சிக்கு முக்கிய காரணஸ்தர்கள். இன்று மலைநாட்டுத் தமிழர்களுக்குப் பல பல குறைகள் இருப்பினும், அவர்கள் தலை நிமிர்ந்து மனிதர்களாக வாழ முடிகிறதென்றால் அதற்கான பெருமை இந்த ஸ்தாபனத்தையே சாரும்.

பல பல சங்கங்களாக தோட்டத்தொழிலாளர் சமூகம் பிரிந்து பிளவுபட்டிருப்பது வருந்தத்தக்கதே. ஒரு தொழிலுக்கு ஒரு சங்கமே இருக்கவேண்டுமென்ற ஏற்பாடு சட்டபூர்வமாக ஏற்படாதவரை இவ்விதம் பல சங்கங்கள் தோன்றுவது இயற்கையே. என்றாலும் தொழிலாளரின் அடிப்படைப் பிரச்னைகளைத் தீர்ப்பதில் இச்சங்கங்கள் எல்லாம் ஒத்துழைக்க அதிக இடமுண்டு. தலைவர்களிடையே தனிப்பட்ட வேற்றுமைகள் என்ன இருப்பினும் முக்கியமான பிரச்னைகளைத் தீர்க்கவேண்டிய விஷயத்தில், பல சங்கத் தலைவர்களும் சேர்ந்து ஒத்துழைக்க முடியுமாயின் அது தொழி...

...பொறுப்பை நிறைவேற்றி வருகிறதெனினும், இலங்கை அரசாங்கம் மிகமிக அசமந்தமாக இருக்கின்றது. இலங்கைப் பிரஜா உரிமை பெற அவ்வொப்பந்தப்படி முழுத் தகுதியுள்ளவர்களின் ஆயிரக்கணக்கான மனுக்களில் பெரும்பாலானவற்றைப் பரிசீலனைசெய்யாமல், மாதக்கணக்காக எவ்வித பதிலும் அளிக்காமல் இலங்கை அரசாங்கம் இருப்பது ஒப்பந்தத்தை நிறைவேற்றத் தவறுவதேயாகும். அரசாங்கக்கட்சியிலே திரு. தொண்டமான் அங்கம் வகித்து, கூடுமான ஒத்துழைப்பை நெருக்கடியான நிலைமைகளில் அளித்தும் கூட திரு. டட்லிசேனநாயகாவின் அரசாங்கம் இவ்வித அலட்சியமனப்பான்மை காட்டுவதேன்? இந்த ஒப்பந்தமெல்லாம் வெறும் கண்துடைப்புத்தானா?

இந்நாட்டிலே அவர்களில் பெரும்பாலோரும் பிறந்து, இந்நாட்டுக்கே பல வருடங்களாக உழைத்துவரினும், அவர்களுக்குப் பிரஜாஉரிமையை எக்காரணம்பற்றியும் மறுப்பது உண்மையில் இந்நாட்டுக்கே செய்துகொள்ளும் தீங்காகும். உணவு உற்பத்தியிலே கூட அவர்களது ஒத்துழைப்பைப் பெற அரசாங்கம் மறுப்பது தற்கொலைசெய்து கொள்வதாகாதா! இதையெல்லாம் பார்க்கையில், நாடற்றவர் விஷயமாக அரசாங்கத்தின் மனம் எவ்விதத்திலும் மாறியுள்ளதாகத் தெரியவில்லை. அட்டன் மகாநாட்டுக்கு இரு அமைச்சர்கள் வந்து பேசியுள்ளது வரவேற்கத்தக்கதே. ஆனால் வெறும்பேச்சுடன் நின்றுவிட்டு, நாடற்றவர் விஷயத்திலே செயலில் ஒன்றும் செய்யாமலிருப்பின், அவர்களை இனியும் ஏமாற்றமுடியாது. அவர்கள் மனமுடைந்து, தீவிரவாதிகளாகிவிடக்கூடும்.

அரசாங்கமுள்ளிட்டு பிறரை அவர்கள் நம்பியிருப்பதில் பயனில்லை. தங்கள் பொருளாதார பிரச்னை...

இன்று அனைத்துலக கத்தோலிக்க மக்கள் மாபெரும்விழாவை ஆலயங்கள் தோறும் இல்லங்கள் தோறும் பக்திச் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். அவர்கள் அனைவரும் ஒன்றுபட்டுக் கொண்டாடும் நன்னாள் அன்பின் அவதாரமாகிய கிறீஸ்துவின் இராஜரீகத் திருநாள். வறுமையில் நிறைந்து விளங்கி, பொறுமையில் சிறந்து விளங்கி, மரணத்தை அணைக்குமுன் தான் விண்ணையும் மண்ணையும் ஆளும் அரசன் என்பதை அவர்களுக்கு எடுத்துரைத்து சிலுவையில் மாண்டார். மாண்டதுடன் அவர் சரித்திரம் முடிந்து விடவில்லை. மரணத்திலிருந்து மீண்டார், தமது வல்லமையைக் காட்டினார்.

யூத மக்கள் கொதித்தெழுந்தார்கள். "இவனைக் கொல்லுங்கள்! இவனைக் கொல்லுங்கள்" என்ற வார்த்தைகளே அவர்கள் வாயிலிருந்து புறப்பட்டன. பிலாத்துவின் அரண்மனைக்கு முன்னால் மாபெரும் மக்கட்கூட்டம். பிலாத்துவுக்கு ஒருபுறம் கிறீஸ்து. மறுபுறம் பயங்கரமே உருவாகி நிற்கும் யூதமக்கள். ஒருபுறம் அனைவரையும் அணைக்கத் துடிக்கும் அன்பின் கரங்கள். மறுபுறம் அன்பின் அண்ணலையே அழிக்கத் துடிக்கும் அதர்மக் கரங்கள். ஒரு பக்கம் வாஞ்சை நிறைந்த நெஞ்சம், மறுபக்கம் வஞ்சம் நிறைந்த நெஞ்சம். பாசம்-மோசம் இத்தனைக்குமிடையே பிலாத்து அரண்மனைக்குள் போய் யேசுவை வரச் சொல்லி, "நீ யூதர்களின் அரசனோ?" என்று கேட்டான். யேசு மறுமொழியாக, "நீராகவே இதை கேட்கின்றீரா, மற்றவர் என்னைப்பற்றி உம்மிடம் கூறினரா?" என்றார். அதற்குப் பிலாத்து. 'நான் யூதனா" உன் இனத்தாரும் தலைமை குருக்களும் உன்னை என்னிடம் கையளித்தார்களே, என்ன செய்தாய்?" என்றான். யேசுவோ, "என் அரசு இவ்வுலகைச் சார்ந்ததன்று. என் அரசு இவ்வுலகைச் சார்ந்ததாயிருந்தால் நான் யூதரிடம் கையளிக்கப்படாதபடி என் காவலர்கள் போராடியிருப்பார்கள் என்றார், எனவே பிலாத்து அவரை நோக்கி, அப்படியானால் நீ அரசன் தானா?" என்று கேட்க, யேசு, "நான் அரசனென்று நீர் சொல்லுகிறீர்! உண்மைக்குச் சாட்சியம் கூறுவதே என் அலுவல். இதற்காகவே பிறந்தேன். இதற்காகவே உலகிற்குவந்தேன், உண்மைமையைச் சார்ந்தவன் எவ...

இன்று

# கிறிஸ்து இராசா திருநாள்

முதல்முக்கியத்துவம் கொடுத்து. இந்நாளின் நன்னோக்கை அனைவரும் உணர்ந்து கிறீஸ்துவின் இராஜரீகத் தினத்தை சுத்த கருத்தோடு ஒத்த மனத்தோடு கொண்டாடுவதற்காகவே ஐப்பசித் திங்களின் இறுதிஞாயிறைத் தந்துள்ளது. எனவே நாம் இத்தினத்தின உட்கருத்தை உணர்ந்து மனுக்குலம் முழுவதற்கும் அரசர்க்கரசராக விளங்கும் அன்பின் உருவத்தைப் பண்பின் சிகரத்தை நாம்கொண்டாடவேண்டும். அவர்மட்டில் நாம் அன்பு கொள்ளவேண்டும். அவர்நம்மிடம் கேட்பதெல்லாம் வேறொன்றுமல்ல அன்புதான். அன்பினாலே அனைத்தையும் ஆளலாம். அகிலத்தையும் ஆளலாம். அன்பினால் தான் மாட்டுக்கொட்டிலை மஞ்சமாகக்கொண்டார் அத்தகைய அண்ணலை நாம் நேசிக்கிறோமா? அவர் வாக்கினைக் கேட்கிறோமா? அல்லது எமது போக்கினைத் தான் மாற்றுகிறோமா?

### திருஇருதய இராஜாங்க ஸ்தாபனம்

கிறீஸ்தவக் குடும்பங்களிலே இன்று முக்கியமாக

### மோ - தார்சீசியஸ்

இடம்பெறும் சிறப்பு நிகழ்ச்சி இதுவாகும். இத்தினத்திலே இல்லங்கள் தோறும் குடும்பம் குடும்பமாகயேசு அரசருக்குத் தங்களை ஒப்புக்கொடுப்பார்கள், தங்கள் இல்லத்திலும் உள்ளத்திலும் இனிது உறைந்து நல்லாட்சி செலுத்த வேண்டுவார்கள் மனச்சமாதானமும், குடும்ப சமாதானமும்விளங்கசெபிப்பார்கள். இதுவே கிறீஸ்தவ குடும்பத்தின் சிறப்புக்கும் சீருக்கும் எடுத்துக்காட்டாக விளங்கும்.

புதுமணத்தம்பதிகள், தங்கள் புத்தம்புதுக் குடும்பத்தை புகழ்மணக்க, புண்ணியம் விளங்க, அன்பு தழைக்க, பக்தியுடன் வேண்டிநிற்பார்கள். இத்தகையகாட்சிகளைத்தான்இன்றுநாம்காணலாம். இவை அனைத்தும்நித்திய அரசரின் சத்தியத்துக்கு எடுத்துக்காட்டன்றோ.

# வரலாறு காணாதஅளவு மழை: தமிழ் நாட்டில் மக்கள் அவதி

## சங்கராபரணி ஆற்றில் 9 பேர் பலியாகினர்

சென்னை, அக். 25

செங்கல்பட்டு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை முதலமைச்சர் கருணாநிதி சென்று பார்வையிட்டார். உடைப்புகள் ஏற்பட்ட இடங்களுக்கெல்லாம் அவர் நேரில் சென்றுபார்வையிட்டார்.

அதிக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டசங்கராபரணி ஆற்றில் கார் ஒன்று அடித்துச் செல்லப்பட்டதால் அதிலிருந்த 9 பேர் நீரில்மூழ்கிமாண்டனர். இவர்கள் புதுச்சேரிக்கு காரில் போய்க்கொண்டிருந்தனர். இவர்களை மீட்பதற்காக நீரில் குதித்த சப் இன்ஸ்பெக்டர் ஒருவரையும் தீயணைப்பு பகுதியைச் சேர்ந்த ஒருவரையும் காணமல் தேடுகின்றனர். நான்குநாட்கள் பெய்த கடும் மழையின் பின்னர் நேற்று வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை தமிழ்நாடுகவர்னர் உஜ்ஜல்சிங் சென்று பார்வையிட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு, உடைகளை வழங்கினார்.

சென்னை மாவட்டத்தில் கடந்த சில தினங்களாகப் பெய்த இடைவிடாதஅடைமழையினால் தாழ்ந்த பகுதிகள் யாவும் ஒரே வெள்ளக் காட்சியளிக்கின்றன. இதுவரை இப்பேய் மழையின் வெள்ளத்துக்கு 10பேர் பலியாகியுள்ளனர். 2000க்கும் மேலான குடிசைகள் வெள்ளத்தில்மூழ்கின. வெள்ள அகதிகள் யாவரும் மாநகராட்சி மன்றங்களிலும் கோவில்களிலும் தங்கியிருக்கின்றனர்.

வங்காளக்கூடாக் கடலில் புயல் உருவாகிக் கடந்ததிங்கட்கிழமை சென்னையில் மழைபெய்யத் தொடங்கியது தெரிந்ததே. சென்னை நகரங்களில் மட்டும் 19 அங்குலமழை பெய்துள்ளது ஒரே நாளில் இவ்வளவு அதிகமாக மழை சமீபகாலத்தில் தமிழ் நாட்டில் பெய்தது இல்லையெனவும் இது வரலாறு காணாதமழை யெனவும்கூறப்படுகிறது. 1888-ம் ஆண்டில் இதே போன்று பேய்மழை பெய்தது எனவும் அதன்பின்னர் இப்போதுதான் இவ்வளவு மழை பெய்துள்ளது எனவும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடைவிடாத மழையினால் வீதிகள் எங்கும் வெள்ளம் இடைவிடாது ஓடிக்கொண்டிருந்ததால்வாகனப்போக்குவரத்துக்கள் ஸ்தம்பித்தன பல இடங்களில் மரங்கள் வேரோடு சாய்ந்து போக்குவரத்தைத் தடைப்படுத்...

...தெற்கே இருந்து சென்னை நோக்கிவந்த புகையிரதங்கள் வழியிலேயே நிறுத்தப்பட்டன, மின்சார புகையிரதப் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது சென்னையில் சில இடங்களில் புகையிரதப் பாதைகள் உடைந்துள்ளன இதனால் சில இடங்களில் புகையிரத சேவை நிறுத்தப்பட்டும்சிலஇடங்களில்தாமதமாகவும் உள்ளது,

தஞ்சைமாவட்டத்தில் இபபெருமழையால்குறுவை சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது கிட்டத்தட்ட 6ஆயிரம் ஏக்கர் அறுவடை வெள்ளத்தால் நாசமாகியுள்ளது என தஞ்சைமாவட்ட ரெவின்யூ அதிகாரி விசுவநாதன் தெரிவித்துள்ளார்

மாநகராட்சிபள்ளிக்கூடங்களிலும் கோவில்களிலும் தங்கியிருக்கும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு மாநகராட்சிசார்பில உணவு வழங்கப்பட்டதாக மாநகராட்சி கமிஷனர் ஷெட்டி தெரிவித்துள்ளார்

### அசம்பாவித..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தடைவிதிக்கப்பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### விழிப்புணர்ச்சி ..

1-ம் பக்கத் தொடர்ச்சி

களை வாங்கவேண்டிய நிலை தோன்றியிருக்கிறது. யாழ்ப்பாணத்தவருக்கு கைத்தொழில்களில் ஆசைபிறக்க வேண்டும்...

# ஐயாறன் எழுதுவது

பேராதனையிலிருந்து சற்றும் எதிர்பாராதவிதமாக மாணவ, மாணவிகள் இங்கு திரும்பியுள்ளனர். அவர்களனைவருக்கும் பல்கலைக்கழகம் திடீரென மூடப்பட்டதைப்பற்றிப் பெரும் வேதனையும் ஏமாற்றமுமாகும்.

தங்கள் பிள்ளைகளை எப்பாடுபட்டாகிலும் மேல்படிப்பு படிக்கப் பல பெற்றோர்கள் நகை முதலியவற்றை விற்று பேராதனைக்கு அனுப்புகின்றனர். அதிலும் யாழ்ப்பாணத்திலிருந்து பேராதனைக்குப் படிக்க தங்கள் பெண்களைத் தனியாக அனுப்பி வைத்த பெற்றோர்களின் மனக்கவலையை விளக்கத் தேவையில்லை. அங்கே தங்கள் பெண்கள் விடுதியிலும்கூட பத்திரமாக இருக்க முடியாதென்பதென்றால் அவர்களுக்கு எப்படி இருக்கும்?

பரீட்சையில் தேறி பல்கலைக்கழகத்திலே படிக்கும் ஒரு மாணவி அங்குள்ள நிலைமையைப் பார்த்துவிட்டு, இந்த மேல்படிப்பு வேண்டாமென்றும், தனக்கு ஒரு பெண் பிறந்தால் எக்காரணம்பற்றியும் பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கு அவளை அனுப்பி வைக்கப் போவதில்லை என்றும் சொன்னாராம்! அப்படியாயின் அங்குள்ள நிலைமையைச் சுலபமாக ஊகிக்கலாம்.

0 0 0

மாணவிகளின் விடுதியான விஜயவர்த்தனா ஹாலுக்கு தாராளமாகச் சென்றுவர தங்களுக்கு உரிமை வேண்டுமென்று மாணவர்கள் கேட்பதாகத் தெரிகிறது. மாணவர்கள் எனும்போது எல்லா மாணவர்களுமென்று கருதக்கூடாது. இந்தக் கிளர்ச்சிகளில் வைத்திய, இஞ்சினியரிங், விஞ்ஞானப் பிரிவு மாணவர்கள் வெகுவாகச் சேருவதில்லையென்றும் கலைப்பகுதிமாணவர்களே இக் கிளர்ச்சியில் ஈடுபடுவதாகவும் ஒரு பழைய மாணவர் தெரிவிக்கிறார். ஏன் என்று கேட்டதற்கு, கலைப்பகுதியினருக்கு வாழ்க்கையில் வேலைவாய்ப்புகள் குறைவாகையால், அவர்கள் மனமுடைந்து எதிர்காலம்பற்றியும் நம்பிக்கை இழந்து இவ்வித கிளர்ச்சிகளில் அதிகம் ஈடுபடுவதாகச் சொன்னார் உண்மைதானா?

சில தீவிர அரசியல்வாதிகள் மறைவில் இருந்துகொண்டு மாணவரில் நன்கு பேசக்கூடிய இரண்டொரு...

...கிறது. சென்ற பெப்ரவரியில்தான் பேராதனையில் பெரும் கிளர்ச்சி ஏற்பட்டது. ஏழு மாதங்களுக்குள் மீண்டும் அந்த உயர்கல்வி ஸ்தாபனம் மூடப்படவேண்டி ஏற்பட்டுள்ளது.

இது மாணவர்களின் குற்றமல்லவென்று ஆசிரியர்கள் சங்கம் தீர்மானித்து, அவர்கள்பால் அனுதபம் தெரிவித்துள்ளதாம். பின் இதற்கெல்லாம் யார் பொறுப்பு? மாணவிகளின் இல்லங்களுக்கு மாணவர் தாராளமாகச் செல்லுவதால், சில மாணவிகளின் வாழ்க்கையே பாழாகிறதாம். துணை வேந்தரே ஒரு பத்திரிகையில் இதைப் பற்றிச் சொல்லி இருக்கிறார். இவ்விஷயத்தில் மாணவிகளின் கருத்து என்ன? அவர்களும் மாணவர்கள் தாராளமாகத் தங்கள் விடுதிக்கு வர விரும்புகிறார்களா?

படாதபாடுபட்டு மாணவ மாணவிகள் படித்து பல்கலைக்கழகத்தில் இடம் பெறுகிறார்கள். பெற்றபின் ஏதோ அற்ப காரணங்களுக்காக அடிக்கடி பல்கலைக்கழகமே மூடப்படவேண்டிய நிலை ஏற்படுவதாயின், அது மாணவர்களுக்கே எப்படி இருக்கும்? கற்றதனால் ஆய பயன் இதுதானா? பல்கலைக்கழகத்திலே பல சமயத்தவருக்கும் கோவில்களும் வழிபடுஸ்தலங்களும் கட்டியுள்ளனர். என்ன பயன்?

வாலிப வயது மிகக் கஷ்டமானது. மாணவிகளுக்காகத் தனிக் கல்லூரிகள் வேண்டுமென்றும் இருசார்பினரும ஒரே இடத்தில் சேர்ந்து படிக்கக்கூடாதென்றும் கூறப்படுகிறது.

இந்தக் கிளர்ச்சிகள் வித்தியோதயா முதலிய வேறு பல்கலைக்கழகங்களுக்கும் பரவுகிறதாம். 'உடும்பு வேண்டாம் கையை விடு' என்பதுபோல் பட்டப் படிப்பு வேண்டாம். தங்கள் பிள்ளைகள் பத்திரமாக வந்து சேர்ந்தால் போதுமென்று பல பெற்றோர்கள் நினைக்கிறார்கள்.

இந்த அவலநிலைமை எப்படித்தான் தீரப் போகிறதோ? இங்கு ஒரு பல்கலைக்கழகத்தை ஆரம்பிக்க தமிழ்த் தலைவர்கள் இன்னுமா வேற்றுமை காட்டப் போகிறார்கள்?

0 0 0

பாலனையக்கழிந்த நாளும் பனிமலர்க் கோதைமார்தம், மேலனைக் கழிந்த...

லாம் ஒத்துழைக்க அதிக இடமுண்டு. தலைவர்களிடையே தனிப்பட்ட வேற்றுமைகள் என்ன இருப்பினும் முக்கியமான பிரச்னைகளைத் தீர்க்கவேண்டிய விஷயத்தில், பல சங்கத் தலைவர்களும் சேர்ந்து ஒத்துழைக்க முடியுமாயின் அது தொழிலாளரின் உரிமைகளைப் பெறுவதற்குப் பெரிதும் உதவியாக இருக்கமுடியும்.

ஸ்ரீமா — சாஸ்திரி ஒப்பந்தம் சட்டமாகியும்கூட இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினருக்கு விமோசனம் பிறக்கவில்லை. நாடற்றவர்களாக ஆக்கப்பட்டுள்ளவர்களிலே ஏழு பேர் இங்குள்ள இந்திய ஹைகமிஷனில் இந்திய பிரஜைகளாக பதிவு செய்யப்பட்டால், நான்கு பேர்களை இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்வதாக இலங்கை அரசாங்கம் ஒப்புக்கொண்டது. இந்திய ஹைகமிஷன் இவ்வொப்பந்தப்படி தன் செய்யாமலிருப்பின், அவர்களை இனியும் ஏமாற்றமுடியாது. அவர்கள் மனமுடைந்து, தீவிரவாதிகளாகி விடக்கூடும்.

அரசாங்க முள்ளிட்டு பிறரை அவர்கள் நம்பியிருப்பதில் பயனில்லை. தங்கள் பொருளாதார பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்ள ஒரு பெரிய லிமிட்டெட் கம்பெனியை பலமான அடிப்படையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆரம்பித்துள்ளது வரவேற்கத்தக்கது. தன்கையே தனக்குதவி. இந்த ஸ்தாபனம் நல்லபடியாக நடப்பின், தோட்டங்களிலேயே வேலையில்லாக் கஷ்டத்தைக் குறைக்கவும், குடிசைக் கைத்தொழில்களை ஆரம்பித்து வேலைவாய்ப்புகளை அளிக்கவும் முடியும். இவ்வகையில் இந்த ஸ்தாபனத்தின் பொறுப்பும் கடமையும் எதிர்காலத்தில் மிகவும் அதிகமாகும்.

என்று கேட்க, யேசு, ''நான் அரசனென்று நீர் சொல்லுகிறீர்! உண்மைக்குச் சாட்சியம் கூறுவதே என் அலுவல். இதற்காகவே பிறந்தேன். இதற்காகவே உலகிற்குவந்தேன். உண்மைமையைச் சார்ந்தவன் எவனும் எனது குரலுக்குச் செவி மடுக்கிறான்'' என்றார்.

இச்சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந் நிகழ்ச்சி யேசுநாதர் அரசன்தான்என்பதைவெளிப்படையாக வலியுறுத்துகிறது.

## அன்பின் திருநாள்

இச்சம்பவம் பாஸ்குக் காலத்தில் இடம்பெற்ற நிகழ்ச்சியாக அமைந்தாலும் திருச்சபையானது இதற்கு

## சிறுபான்மைத் தமிழருக்கு பிரதிநிதித்துவம்

ஆட்சிமன்ற மேல் சபைக்கு (செனட் சபைக்கு) ஐந்து புதிய அங்கத்தவர்களை மக்கள் பிரதிநிதிகள் சபை தெரிவு செய்திருக்கிறது. காலியான ஐந்து இடங்களுக்கு ஆறுபேர் போட்டியிட்டனர் இவர்களில் ஒருவர் சிறுபான்மைத் தமிழர். சிறுபான்மைத் தமிழருக்கு ஆட்சிமன்றத்தில் ஒரு பிரதிநிதித்துவமாவது இருக்கவேண்டுமென்பது நீண்டகாலக் கோரிக்கை. இது சம்பந்தமாக சிறுபான்மைத் தமிழர் தூதுக்குழுக்கள் சமீபத்தில் பிரதமரையும் பேட்டிகண்டு கோரியதுடன் மகஜரும் சமர்ப்பித்திருந்தன.

சிறுபான்மைத் தமிழர் தமது குறைகளையும் கஷ்டங்களையும் ஆட்சிமன்றத்தில் எடுத்துக்கூறி நிவாரணம் தேடுவதற்கு ஆட்சிமன்றத்தில் ஒரு பிரதிநிதித்துவமாவது வழங்கப்படவேண்டுமென்பதைப் பலரும் உணர்ந்தனர். இதனால் திரு. ரி. இராசலிங்கம் என்பவரின் பெயரை இரு பெரும் தமிழ்க்கட்சிகள் செனட்சபைக்கு ஓர் அங்கத்தவராகத் தெரிவு செய்வதற்கு ஒத்துழைத்தன. சிறுபான்மைத் தமிழர் ஸ்தாபனங்களும் மற்ற தமிழ்க்கட்சிகளும் அவருக்கு ஆதரவளித்தன. ஆனாலும் அவருக்குப் போதிய வாக்குகள் கிடைக்காததால் அவர் செனட்சபைக்குத் தெரிவு செய்யப்படவில்லை. தமிழ்ப் பிரதிநிதிகளின் வாக்குகள் அனைத்தும் கிடைத்தாலும் அவர் தெரிவுசெய்யப்படமாட்டார் என்பது தெரிந்த விஷயம்தான். என்றாலும் சிறுபான்மைத் தமிழர் விஷயத்தில் அதிக அக்கறை செலுத்தி அவர்களுக்காகப் பாடசாலைகளை உருவாக்கி அவற்றை அரசாங்கமே எடுத்து நடத்தவும் வழிசெய்த பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த பிரமுகர்களும் அரசியல் தலைவர்களும் அவர்களின் அனுதாபக் குரலுக்குச் செவிசாய்த்த அரசாங்கமும் ஆளும் கட்சியினரும் ஒரு சிறுபான்மைத் தமிழர் செனட் சபைக்குத் தெரிவுசெய்யப்படுவதற்கு ஆதரவளிப்பார்களென்றே பலரும் எதிர்பார்த்தனர். ஆனால் திரு. இராசலிங்கம் ஒரு செனட்டராகத் தெரிவுசெய்யப்பட முடியாமற்போனதிலிருந்து சிறுபான்மைத் தமிழருக்காகப் பெரும்பான்மைச் சமூகத்தினர் காட்டிய அனுதாபமெல்லாம்வேறு காரணங்களை அடிப்படையாக வைத்து முதலைக் கண்ணீர் வடித்ததுதான் என்றுகருத இடமளித்துவிட்டது.

சிறுபான்மைத் தமிழரின் முன்னேற்றத்திலும் அவர்களின் நல்வாழ்விலும் பெரும்பான்மைச் சமூகத்தவருக்கு உண்மையிலேயே அக்கறையிருக்குமானால் சிறுபான்மைத் தமிழர் ஒருவரை ஆட்சிமன்றத்துக்குத் தெரிவு செய்வதில் எதிர்க்கட்சியினரும் ஆளும் கட்சியினரும் ஒன்று சேர்ந்து காரியம் சாதித்திருக்கலாம். இப்போதுகூட அரசாங்கத்துக்கு சிறுபான்மைத் தமிழர்மீது உண்மையான அக்கறையிருந்தால் செனட்சபைக்கு கவர்னர் ஜெனரல் நியமிக்கவிருக்கும் ஐந்து பேர்களில் ஒருவராக எல்லோரும் ஆதரிக்கும் திரு. இராசலிங்கத்தை நியமிக்கமுடியும். மனமுண்டானால் இடமுண்டல்லவா?

அரசாங்கமும் பெரும்மைச் சமூகமும் சிறுபான்மைத் தமிழர் விஷயத்தில் காட்டிய ஆர்வமும் அக்கறையும் வெறும் தந்திரமென்பதை சிறுபான்மைத் தமிழருக்கு உணர்த்தவும் சிறுபான்மைத் தமிழரின் நலனில் பெரும்பான்மைத் தமிழருக்குத்தான் உண்மையான அக்கறை இருக்கிறதென்பதை எடுத்துக்காட்டவும் இருபெரும் தமிழ்க் கட்சிகளும் ஏதாவதொரு தொகுதியிலிருந்து ஒரு சிறுபான்மைத் தமிழரை ஆட்சிமன்றத்துக்குப் போட்டியின்றித் தெரிவு செய்து அனுப்பலாம்.

இதேசமயம் வேறு எவரையும் எதிர்பார்த்திருக்காமல் சிறுபான்மைத் தமிழருக்கு ஆட்சிமன்றத்தில் பிரதிநிதித்துவம் கிடைப்பதற்கு ஒரு சில ஸ்தானங்களை சட்டமூலம் ஒதுக்க வேண்டியது அவசியமாகும்.

வழங்கினார்.

சென்னை மாவட்டத்தில் கடந்த சில தினங்களாகப் பெய்த இடைவிடாத அடை

## அசம்பாவித....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தடைவிதிக்கப்பட்டிருந்தது. வார்டனின் உத்தரவு பெற்றே சங்க நோட்டீஸ் ஒட்ட வேண்டும். ஆனால் மாணவர் தலைவர்கள் சிலர், அம்மண்டபத்திற்குச் சென்று வார்டனின் அனுமதிபெறாமல் நோட்டீஸ் ஒட்டியதோடு, சாப்பாட்டு அறைக்குள் சென்று மாணவிகளுக்கு வைக்கப்பட்டிருந்த 'கேக'குகளைச் சாப்பிட்டுவிட்டார்கள். அந்த நேரம் அங்கு வந்த உப-வேந்தர், அவர்களை உடனடியாக வெளியேற்றினார்.

அம் மாணவ தலைவர்கள் வேறு மாணவர்களையும்சேர்த்துக்கொண்டு, உப வேந்தர் வீட்டிற்கு கற்களை வீசினார்கள். பிரச்னையிருந்தால் தீர்த்து வைப்பதாக உப வேந்தர் கூறினார் மாணவர்களைக் கலைந்துச் செல்லும்படியும், அதன்பின்தான் பேச்சுவார்த்தை நடத்தலாம் என்றும் மேலும் உப வேந்தர் கூறினார். தங்களால் மாணவர்களைக் கட்டுப்படுத்தமுடியாதென மாணவ தலைவர்கள் தெரிவித்தனர். இதன் பின்னர் ஆயுதம் தாங்கிய பொலிஸார் அழைக்கப்பட்டனர். பொலிஸாரை பல்கலைக் கழக வளவிலிருந்து வெளியேற்றவேண்டுமென்பது மாணவரின் மூன்றாவது கோரிக்கை.

கலைப்பிரிவு, விஞ்ஞானப் பிரிவு மாணவர்கள் வகுப்புகளை பகிஷ்கரித்து வேலைநிறுத்தம் செய்தார்கள் வைத்திய பிரிவு, பொறியியல் பிரிவு மாணவர்கள் தொடர்ந்து வகுப்புகளுக்கு சென்றுவந்தார்கள். இதனால் மாணவர்களுக்கிடையே சச்சரவுஏற்படும் நிலைமை உருவாகியது. வைத்திய பொறியியல் பிரிவு மாணவ சங்கங்கள் வேலைநிறுத்தத்தில் கலந்து கொள்வதில்லையென தீர்மானித்தன.

பேராதனை மாணவர் சங்கம், பல்கலைக் கழக மாணவர்கள் எல்லாருக்கும் தலைமைதாங்கும் சங்கம் எனக் கூறமுடியாது. கலைப்பிரிவு மாணவர் சங்கத் தலைவர் தான் பேராதனை மாணவர் சங்கத் தலைவராகவுமிருக்கிறார். இவர்கள் மற்றப்பிரிவு மாணவசங்கங்களைக் கேட்டுமுடிவுசெய்யவில்லை. வேலைநிறுத்தம்செய்வது பற்றிவைத்திய பொறியியல் பிரிவு மாணவ சங்கங்களைக்கேட்கவில்லை

பல்கலைக்கழகம் மூடப்பட்டுவிட்டதால் எல்லா மாணவர்களும் தங்கள் வீடுகளுக்குச் சென்றுவிட்டார்கள்

வும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடைவிடாத மழையினால் வீதிகள் எங்கும் வெள்ளம் இடைவிடாது ஓடிக்கொண்டிருந்ததால்வாகனப்போக்குவரத்துக்கள் ஸ்தம்பித்தன பல இடங்களில் மரங்கள் வேரோடு சாய்ந்து போக்குவரத்தைத் தடைப்படுத்தின, வியாசர்பாடி, கோடம்பாக்கம், சைதாப்பேட்டை, ராஜ அண்ணாமலைபுரம், தியாகராஜநகர், பெரம்பூர், அய்யனாவரம், புளியந்தோப்பு ஆகிய பகுதிகளில் உள்ள ஏராளமான குடிசைகள் வெள்ளத்தால் மூழ்கடிக்கப்பட்டுள்ளன.

தண்டவாளத்தின் மீது வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியதன் காரணமாக

## கூட்டுறவு......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 50 ஆண்டுகளில் அபிவிருத்தியடைந்து வந்துள்ள கூட்டுறவு இயக்கத்தின், அபிவிருத்திக்காக தங்கள் ஆட்பலன் திறன் முதலியவற்றை கூட்டுறவாளர்கள் ஒன்று திரட்டவேண்டிய தருணம்வந்துள்ளது. நாட்டு மக்களின் பொருளாதார வளர்ச்சி, சமூக முன்னேற்றம், என்பவற்றுக்காககூட்டுறவு இயக்கத்தை ஒற்றுமையுடன் தேசிய அடிப்படையில் நாம் பயன்படுத்த வேண்டியுள்ளது.

கூட்டுறவாளர்கள் ஒற்றுமையுடன் அகில இலங்கை அடிப்படையில் கருமமாற்றுவதற்குரிய வேளைவந்துள்ளது என்று நான் இதயபூர்வமாக நம்புவதால் இவ்வாறு எடுத்துரைக்க நேர்ந்தது.

மக்கள்வங்கியின் பங்கைப் பற்றிய சந்தேகங்கள்யாவற்றும், கூட்டுறவாளர்கள் தங்கள் மத்தியிலிருந்து நிரந்தரமாக அகற்றியிருப்பதால் மக்கள் வங்கியை கூட்டுறவு இயக்கத்தின் கடன் வழங்கும் உச்சி நிறுவனமாக கூட்டுறவு இயக்கம் ஏற்றுக்கொண்டுள்ளது என்பதை நான் உறுதியாகவும் நம்பிக்கையுடனும் கூறமுடியும்.

இவ்வேளையில் கூட்டுறவுத் துறைக்கு வசதி அளிக்கும் விடயத்தில் இணைவாக இயங்கிவரும் ஒருமுறையை பற்றி குறிப்பிட வேண்டியுள்ளது. இம்முறையின் கீழ் தற்போதுள்ள கூட்டுறவு வங்கிகள் இடைவியாபாரிகள் நிலையில் இயங்கி வருகின்றனர். தமது கடன் தேவைகளுக்காக மக்கள் வங்கியின் உதவியைப் பெறும் வங்கிகள் கூட்டுறவு வாடிக்கையாளருக்கும் அவற்றுடன் கொடுக்கல் வாங்கல் செய்யும் கூட்டுறவு சங்கங்களுக்கும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

## விழிப்புணர்ச்சி ..

1-ம் பக்கத் தொடர்ச்சி

களை வாங்கவேண்டிய நிலை தோன்றியிருக்கிறது. யாழ்ப்பாணத்தவருக்கு கைத்தொழில்களில் ஆசைபிறக்க வேண்டும். இங்கும் பல கைத்தொழில்கள் ஆரம்பிக்க வேண்டும் இதற்கு தனிப்பட்டவர்கள் முயற்சி பயனளிக்காது கூட்டுறவு முறையில் முயற்சி செய்ய வேண்டும்.

பதில் கூட்டுறவு ஆக்க ஆணையாளர் திரு ரி டி எல் பீரிஸ் கூறியதாவது: நான் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் வடபகுதி கூட்டுறவாளர் விழாவில் கலந்துகொள்ளத் தவறுவதில்லை. எனக்கு வடபகுதி கூட்டுறவு இயக்கத்தின்மீது மதிப்பும்கௌரவமும்உண்டு கடந்த 25 வருடகாலமாக நாட்டில் கூட்டுறவுவளர்ச்சி குறிப்பாக வடபகுதி கூட்டுறவு இயக்கம் தனக்கே உரிய சிறப்பு பண்டு உடையது. இந்த நாட்டில் மேற்கொள்ளப்பட்ட கூட்டுறவு முயற்சிகளில் வடபகுதி முன்னோடியாக விளங்கிவந்துள்ளது.

நாட்டில் 4000 சங்கங்கள் செயலற்ற நிலையிலிருந்து வருவதாக கூட்டுறவு ஆணையாளர் அறிக்கை கூறுகிறது, 2000 சங்கங்கள் அந்திய கால நிலையை அண்மிவிட்டதாகவும் கூறுகிறது. அதே நேரம் மொத்த சங்கங்களில் 50 சதவீதம் நல்ல முறையில் நடைபெற்றுவருவதாகவும் கூறப்படுகிறது ஏனைய சங்கங்களையும் முன்னேற்ற நாம் முயற்சிக்கவேண்டும்.

## "திட்டமிட்டு உழையுங்கள்"

விஸ்வமடு. சனி

''கட்சிகளுக்கு ஆலோசனை கூறவும் வெவ்வேறுபகுதிகளிலுமுள்ள கிராம அபிவிருத்திப்பணிகளில் பங்குகொள்ளவும் எமது உறுப்பினர்களுக்கு வழிகாட்டவும் வேலைவசதிகளை உண்டாக்க திட்டமிட்டு உழைக்கவேண்டும். என சாவகச்சேரி எம். பி. தமது தொகுதிவாலிபர்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டார்.

அக்கடிதத்தில் மேலுல் கூறப்பட்டிருப்பதாவது:

எங்காவது பொய்ப்பிரசாரங்கள் தலைகாட்டுமேயானால் அதை முளையிலேயே கிள்ளியெறிந்து உடனடியாக அதைமறுத்து அதற்கான உண்மையான விளக்கத்தைக் கொடுத்து மக்கள் மனதை தெளிவுபடுத்த வேண்டும். இதுவே எமது பணிகளில் அதிமுக்கியபணியாகும். ......

பிக்கை இழந்து இவ்வித கிளர்ச்சிகளில் அதிகம் ஈடுபடுவதாகச் சொன்னார் உண்மைதானா?

சில தீவிர அரசியல்வாதிகள் மறைவில் இருந்து கொண்டு மாணவரில் நன்கு பேசக்கூடிய இரண்டொருவரை வசப்படுத்தி கலாட்டாக்களைக் கிளப்பிவிடுவதாகவும் மற்ற மாணவர்கள் இக்கிளர்ச்சிகளை விரும்பாவிடினும் அதை எடுத்துச் சொல்ல முடியாமல் சும்மா இருப்பதாகவும் கூறப்படு

கலைக்கழகத்தை ஆரம்பிக்க தமிழ்த் தலைவர்கள் இன்னுமா வேற்றுமை காட்டப் போகிறார்கள்?

0 0 0

பாலனாய்க்கழிந்த நாளும் பனிமலர்க் கோதைமார்தம், மேலனாய்க் கழிந்த நாளும் மெலிவொடு மூப்பு வந்து, கோலனாய்க் கழிந்த நாளுங் குறிக்கோளிலாது கெட்டேன், சேலு மாம் பழனவேலித் திருக் கொண்டீச்சரத்துளானே.

— அப்பர் அடிகள்

## நிபந்தனையுடன் மீண்டும் வேலை

முல்லைத்தீவு, சனி

சேவையில் சேர்ந்தகாலம் முதல் சிங்களப் பரீட்சைகளுக்குத் தோன்றாததன் காரணத்தினால் பதவி நீக்கம் செய்யப்பட்டமுல்லைத்தீவுப் பிரிவுக் காரியாதிகாரி பகுதியைச் சேர்ந்த இரு கிராம சேவையாளர்கள் மீண்டும் பதவிக்கு நேற்றுமுதல்சேர்க்கப் பட்டுள்ளனர். புதுக்குடியிருப்பு கிராம சேவையாளர் திரு. கா. தம்பாபிள்ளை தண்ணீரூற்று கிராம சேவையாளர் திரு இ சிவப்பிரகாசம் ஆகியோரே. இவர்கள் சென்ற மூன்று மாதத்துக்கு முன் பதவியை இழந்தனர். பின்பு இவர்களால் அனுப்பப்பட்ட அப்பீல் மனுக்களும் நிராகரிக்கப்பட்டன வவுனியா எம் பி திரு தா. சிவசிதம்பரம் எடுத்துக் கொண்ட முயற்சியைத் தொடர்ந்து இவர்கள் 1970ம் ஆண்டு ஜூலை மாத முடிவுக்குள் சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டும் என்ற நிபந்தனையுடன் மீண்டும் வேலையில் அமர்த்தப் பட்டனர்.

## மரண அறிவித்தல்

**நாகேஸ்வரி தம்பையா**

அம்பலவாணர் தம்பையா (மலாயன் பென்சனர் உரும்பராய்) வின் மனைவி நாகேஸ்வரி சிவபதமடைந்து விட்டார். இவர் அம்பலவாணர் (எஸ் டி ஏ நிக்கவரட்டிய) தில்லைநாதன் (சிங்கப்பூர்) செல்வரத்தினம் (இந்தியன் ஓவர்சீஸ் பாங்க்) நவரத்தினம் (ஆர். எஸ். ஏ. இ போ ச. அனுராதபுரம்) ராஜேஸ்வரி (மலேசியா) ஆகியோரின் தாயாரும் சனகம்மா, செல்வரதி, லலிதா. சற்குணமதி சதாசிவம் ஆகியோரின் மாமியாருமாவர். அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைகளுக்காக 33 நல்லூர் குறுக்கு வீதியிலிருந்துஇன்று (26-10-69) மாலை 4மணிக்கு செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

1602

## நன்றி நவிலல்

**திரு. சு. பெ. முருகுப்பிள்ளை அவர்கள்**
**வியாபாரிமூலை, பருத்தித்துறை**

• மாத்தளை, கண்டி, வியாபாரிமூலை, சு. பெ. முருகுப்பிள்ளை என்னும் பிரபல வியாபார நிலையங்களின் ஸ்தாபகரும் எமது அருமைத் தந்தையுமான திரு சு. பெ. முருகுப்பிள்ளை அவர்கள் 8-10-69-ல் சிவபதமடைந்து 9-ம் திகதி வியாழக்கிழமை நடைபெற்ற ஈமக்கிரியைகளின் போதும் பின்பும் வருகைதந்து அனுதாபம் தெரிவித்த அன்பர்களுக்கும் வேறும் தந்தி, கடிதமூலம் தங்கள் அனுதாபத்தை தெரியப்படுத்திய அன்பர்கள் யாபேருக்கும் எம்சார்பிலும் எம் மைத்துனர்கள், யாழ்ப்பாணம் Dr K. கனகசபாபதி அவர்கள் கண்டி, திரு. க. அ. கந்தசாமியினர் அவர்கள் மற்றும் எம்குடும்பத்தோர் யாபேரின் சார்பிலும் உளங்கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். தனிப்பட்ட நன்றி அறிவிக்க இயலாமைக்கு வருந்துகிறேன்.

வியாபாரிமூலை
பருத்தித்துறை
20-10-69

இங்ஙனம்
சு. பெ. மு. கனகசபாபதி
1452

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபன ஆதாரால் யாழ்ப்பாணம் கிவன்றோவில் மலே வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 26 [illegible] அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org